51

AUM:

THIRTY THREE
DEVOTIONAL THOUGHTS,
AND.
THREE SONNETS.

By

BIRAMA MUTHAN.
(TONDAIMAN S. B. MUTHAYYA, TINNEVELLY,)
Senior Art Instructor, Hindu College.

OFFICE OF THE REGISTRA
No. —
21 JUN 1922

ஓம்.

முப்பத்து மூன்று
தியானச் சிந்தனைகள்,
மூன்று தனிப்பாசுரங்கள்.

பிரம முத்தன்.
(தோண்டைமான், முத்தையா, இந்துகாலேஜ், திருநெல்வேலி.)

எழுதியது.

மேற்படியார் குமாரன்,
தொ. மு. பாஸ்கரனால்
பதிப்பிக்கப்பெற்றது.

1922.

...NTRAL PRESS. TINNEVELLY.

...ed.] [*Price* 8 *As.*

R
M22

21 JUN 1922

AUM:

THIRTY THREE
DEVOTIONAL THOUGHTS,
AND
THREE SONNETS.

By

BIRAMA MUTHAN.
(TONDAIMAN S. B. MUTHAYYA, TINNEVELLY,)
Senior Art Instructor, Hindu College.

ஓம்.

முப்பத்து மூன்று
தியானச் சிந்தனைகள்,
மூன்று தனிப்பாசுரங்கள்.

பிரம முத்தன்.
(தொண்டைமான், முத்தையா, இந்துகாலேஜ், திருநெல்வேலி.)
எழுதியது.

மேற்படியார் குமாரன்,
தொ. மு. பாஸ்கரனால்
பதிப்பிக்கப்பெற்றது.

1922.

UNION CENTRAL PRESS, TINNEVELLY.

All Rights Reserved.] [Price 8 As.

முப்பத்து மூன்று

தியானச் சிந்தனைகள்.

	பொருளடக்கம்	பக்கம்
1.	உண்மைப்பொருள்.	1
2.	கடவுளை அறிதல்.	2
3.	பலபொருள் ஒருகாக்ஷி.	3
4	துன்பம் துன்பமன்று.	4
5.	அன்பின்மயம்.	6
6.	பூரணசுகம்.	7
7.	மனத்திருப்தி.	8
8.	நகைவியாபாரி.	9
9.	சஞ்சலநிவிர்த்தி.	11
10.	சாந்த சோபிதம்.	12
11.	சித்திரக்காட்சி.	13
12.	மரண பயம்.	14
13.	துன்ப வார்த்தை.	16
14.	தன்மறுப்பு.	17
15.	மனவாதம்.	18
16.	கனு அரசு.	19
17.	உண்மைச் சன்னியாசம்.	21
18.	முயற்சியின் லாபம்.	22
19.	தன்னந்தனியன்.	23
20.	நிலைத்தபேறு.	25
21.	சத்சித் ஆனந்தம்.	26
22.	நாடக அரங்கம்	27
23.	தன் முயற்சி.	29
24.	கண்ணீரின் பெருமை.	30
25.	சாதுக்களின் வாதம்.	31
26.	ஆண்டான் அடிமை.	33
27.	ஞானரசவாதம்.	34
28.	பொன்தட்டு போசனம்.	35
29.	தாயின் கருணை.	36
30.	வாசா ஞானம்.	37
31.	வெட்ட வெளிப்பெண்.	39
32.	பக்தியின் பரவசம்.	40
33.	பாவனைப் பயன்.	41
	மூன்று தனிப்பாசுரங்கள்.	
	கடவுள்.	43
	உலகம்.	43
	மனிதன்.	44

172459

என்பிதா.

172459
R
M22

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்." (குறள்.)

என்பிதாவின் பிள்ளைத்திருநாமம் பிரம முத்து என்பது; அவர்கள் ஆங்கிலங்கற்ற காலத்தில் புனைப்பெயராய்க் கொண்டுள்ளது; தொண்டைமான் முத்தையன் என்பது. தன் பிள்ளைத்திருநாமத்தை விடுத்துப் புனைபெயர் சூடிக்கொண்டதின் காரணம் எனக்கு வெகுநாளாய் வியப்பையே கொடுத்துக் கொண்டிருந்தது. அவர்கள் பாலப்பருவங்களில் பாடிய பாடல்களில் சிலவற்றை நான் பார்க்கநேர்ந்தபோது, அவற்றுள்ளெல்லாம், அவர்களின் தன் மறுப்பும், தெய்வவழிபாடும், பிரம சாக்ஷாத்கார அநுபவமும் விளங்கின. இதோடு அவர்கள் தன் ஆப்த நண்பரோடு அழவழாவிப் பேசிக்கொண்டிருக்கும் காலங்களில், தன்னை இரட்டை மனிதன் (Double mau) எனப் பலதடவை சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர்கள் தன் நண்பர்களிடம் அடிக்கடி "இவ்வுலகம் ஓர் நாடகசாலையா மென்றும், இதில் நடிக்கவந்த நாம், நமது வேஷத்துக்குப் பொருத்தமாய் நடித்தால் தான் நலனுண்டு. நாடக அரங்கில் இராஜவேஷமிடும் ஒருவன், உண்மையில் இராஜனல்லனாயினும் ராஜகெம்பீரத்தோடு நடித்தும், தன்னை இன்னான் என்று உணர்ந்திருப்பானல்லவா?" என்ற வார்த்தைகளைப் பிரயோகிக்கக் கேட்டிருக்கிறேன்.

அவர்கள் பிரம சமாஜத்தில் சேர்ந்து, அப்பக்தர்களோடு சிலகாலம் ஊடாடியிருந்தார்கள். அக்காலங்களில் அவர்கள் எழுதிய "இயலானந்தம்" "உண்மை" "முந்நிற உட்கிடை" "சமரச ஞான அநுபவம்" என்னும் வியாசங்களில் பக்தியின் பலனையும், தன் மறுப்பையும்; பிரம சாக்ஷாத்காரத்தையுமே விளக்குவதாகக் கண்டேன். சிலபோது தன் கிறிஸ்தவ நண்பரோடு "நீ எப்படிப் பட்டபாவியாயினும் என்னைச் சரணடை உனக்காகவன்றோ நான் இரத்தம் சிந்தினேன்" என்று கிறிஸ்து பகவான் சொன்ன வார்த்தைகளை நீங்கள் உணர்ந்து அனுபவிக்கிறீர்களா?" எனக் கேட்பார்கள். "எம்மதமும் சம்மதமேன பேரிகை ஆர்மின்" என்று சமரச ஞானத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பிரதி ஞாயிறு இரவிலும் எங்கள்வீட்டில் தேவதா பிரார்த்தனை நடைபெறும். அக்காலங்களில் அவர்கள், "எல்லாம் நீயறியாததொன்றன்றே, எங்களுக்கு வேண்டியதை நீயே கொடு, நீ வாழ்வித்தாலும் சரி, தாழ்வித்தாலுஞ்சரி, உன் திருவுள்ளம் எங்கள்பாக்கியம்" எனப் பிரார்த்தனையை முடிக்கக் கேட்டிருக்

கிறேன். குடும்ப விவகாரங்களில் வரும் துன்பங்களை அனுபவிக்கும்போது, "நான் வந்தகாரியம் வேறு, நான் அனுபவிப்பது வேறோ, என் அழைப்பின்காலம் கிட்டிவிட்டதோ" எனச்சொல்லி மௌனம் சாதிப்பார்கள்.

இத்தியானச் சிந்தனைகள், அவர்களால் சிலகாலங்களுக்கு முன் எழுதப்பட்டவைகள். சிலபோது பகலிலும், சிலபோது இரவிலும் தனித்திருந்து தியானம்செய்வார்கள். "சுடச்சுட ஒளிரும் பொன்போல்" துன்பமே ஒருவனை பரம்பொருள் பால் ஒன்றுபடுத்தும் தன்மையது என மகிழ்ந்து, அக்காலங்களில் பக்திரசமான பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பதும், தான் சுயமாய் பாடல்களையோ அன்றி சிந்தனைகளையோ எழுதுவதும் அவர்களின் வேலை. அவர்களின் அந்தரங்கம் அறிந்த சில நண்பர்கள் அவர்கள்பால் பக்திவிநயமாய் நட்புற்றிருப்பார்கள். அவர்கள் ஏதாவது ஓர் பொருளிலோ, அன்றி சிந்தனையிலோ கருத்தூன்றி நிற்பார்களானால், அதையடையும்வரை வெகுவாய் மயங்கி நிற்பார்கள். அக்காலங்களில், அவர்கள் தனித்திருந்து வேறோர் மனிதனிடம் போராடுவதுபோல், தன்னில்தாமே புலம்பிக் கொண்டிருக்கக் கேட்டிருக்கிறேன்.

அற்ப அறிவுடையனாய நான் அவர்களின் உலக நடிப்பைத் தெற்றெனவிளக்கும் ஆற்றலில்லாதவனே. எனினும், சிலநண்பர்கள் இச்சிந்தனைகளை அச்சிட்டு உதவ வேண்டுமெனக்கேட்டுக் கொண்டதின் நிமித்தம் அச்சிடலானேன். அவர்களின் உண்மை இயல் இன்னதென அறியாத சிலர் இச்சிந்தனைக்கர்த்தர் அவர்களாயிருக்க முடியாதெனமருள்வதும், அவர்களையண்டிப்பழகிய சில பொழுதிலேயே உண்மையறிந்து கொள்வதும் சகஜமாம். அவர்களோதம் அறிவால் இது எழுதப்படவில்லையென்றும்; தாம் கருவியாக நின்று திருவருள் கற்பித்தபடியே எழுதியதாக கர்த்திருத்வம் பூராவும் பரம்பொருளுக்கே அர்பித்திருக்கிறார்கள்.

இச்சிந்தனைகள் சிலவற்றுள் குப்தமான முடிவுகளைக் கண்டு தியங்கும் உண்மை உணர் அவாவினரான அறிஞர், அவர்களிடம் நேரிலோ, அன்றிக் கடிதமூலமாயோ விசாரணைசெய்து கொள்ளின், விகசிதமாக விளக்கஞ் செய்யப்பெறுவார்கள். திருவருள் முன்னிற்க. சுபம்;

10—5—1922 } தொ. மு. பாஸ்கரன்.
குற்றால ரோட்டு } திருநெல்வேலி.

(P. S.) அச்சிடுங்கால் சில அச்சுப்பிழைகள் ஏற்பட்டுவிட்டன. அறிஞர் கருத்தையூன்றி, குற்றம் பொறுக்க வேண்டுகின்றேன்.

ஓம்.

முப்பத்தி மூன்று

தியானச் சிந்தனைகள்.

திருவருள் எனக்குக் கற்பித்த படியே இதை எழுதுகின்றேன் என்க்கென இதில் ஒன்றுமில்லை,

பிர்ம முத்தன்.

---

1. உண்மைப் பொருள்.

—:0:—

மனமே! நீ உண்மையில் நிலைத்திருக்க விரும்புகிறாயா? உண்மை இன்னதென்பதையும், உண்மைக்கு உறைவிடம் இன்னதென்பதையும் முதலில் அறிவாயா? நீ கண்கூடாய்க் கண்ட பொருளையும், காதாரக்கேட்ட சொல்லையுமே, உண்மை என்று மயங்குகின்றாய். காணும்பொருட்களெவையும் அழியுந் தன்மையனவேயாம். நல்லனவும், தீயனவுமான சப்தங்கள் உன்னைத் தாக்கின காலத்தில், நீ நல்லனவாய்க்கொள்ளின், உனக்கு நன்மையையும்; தீயனவாய்க்கொள்ளின் தீமையையும் பயப்பனவாயினவே! அதனால் சப்தமாத்திரையான சொற்களெல்லாம் உன் மன நிலைக்குத்தக்க வாறன்றோ ஆயின. காட்சியின்பம் எவ்வளவு குதூகலத்தைக் கொடுக்கிறது. காட்சியில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பொருளையும் பிரித்துத் தனித்து நோக்கினால் அவ்வளவு சந்தோஷத்தைக் காணோமே! பிரிவற்று ஏக உருவாய் எங்கும் நிறைந்ததாய் எல்லாம் வல்லதாய் உள்ள ஒரு பொருளன்றோ அக்காட்சியில் சம்பந்தித்திருந்தது. அது அங்குள்ள வரையும் ரமணீய காட்சியுங் கண்டாய். அதனைத் தனிப் பிரித்து உன் மனத்தில் பாகுபடுத்தினாய். அதனால் உனக்கும் பாகுபாடுவந்தது. கீத ஒலியைக் கேட்டமாத்திரத்தில் எவ்வளவு பரவசப்படுகின்றாய். நீ மாத்திரமா? அறியாப் பருவத்துச் சிறாரும், விலங்கினங்களும், புள்ளினங்களும், தாவரங்களுங் கூட சப்ததன் மாத்திரையான நாத ஒலியைக் கேட்டமாத்திரத்தில் தம்மை அறியாதே ஆனந்திக்கின்றனவே. சப்த தன் மாத்திரையான ஒலித்திரளைப் பிரித்து ஒவ்வோர் சுரமாக நீ! கணக்கிட்டுக் காண்பாயானால், யாதொரு ஆனந்தமும் ஜனிக்கக் காணோமே! வெறும் வார்த்தையாக வன்றோ முடிகிறது. கீத ஒலியில் உள் நின்று ஆட்சி செய்து கொண்டிருந்த ஒரு பொருளை நீ அறியாது பாகுபடுத்திக் கண்டாய். அப்பொருளின் விசேடத்தாலேயே கீத ஒலி ஜோபிதப் பட்டதை அறிந்தாயில்லை. எந்தப் பொரு

ளானது காட்சி அனுமானத்தாலும், சொல்லுஞ்சொற்களாலும் கரைகாணக் கூடாததாய், அனுமானப் பொருட்களும், காட்சிப் பொருட்களும் நசிக்குங் காலத்திலும் நசிக்காததாய், என்றும், எவ்விடத்தும் உள்ளதாய், எப்பொருளிலும் தன்னரசு உடையதாய் உள்ளதோ, அது ஒன்றே உண்மையான பரம் பொருள். அவ்வுண்மைப்பொருளை மனமே! நீ இங்குங் காண்கின்றாய், அங்குங் காண்கின்றாய்; எங்குங் காண்கின்றாய். அவ்வொரு தனிப் பொருளே, உன்னையும், என்னையும், உலகம் யாவையும் தன்னுள் அடக்கிய தனிப் பொருள். ஆனதால் மனனே! உண்மைப் பொருள் எதென ஆராய்ந்தனையாயின் உண்மைக் கெல்லாம் உறைவிடமாய், யுகாந்த காலந்தொட்டு தோன்றும் பொருட்கள் எவற்றிலும், சூட்சுமானு சூட்சியாய் அமைந்து நிற்கும் உண்மைப் பொருளை, அவ்வுண்மைப் பொருளில் அமைந்த நீயும் உண்மையோடு உறவாடி நில். அவ்வுண்மைத் தனிப் பொருளும் உன்னைத் தன்னில் நிலைத்திருக்கச் செய்யும்.

ஓம். தத் ஸத்.

2 கடவுளை அறிதல்

—:೧:—

மனமே! நீ கடவுள் எத்தன்மையர், என்செய்ய வல்லவர், எங்கிருப்பவர், என்று ஓயாது ஆய்கின்றாய், உன் ஆராய்ச்சி எப்பயனுடையது, எம்முடிவடைவது என்பதை நீ அறிந்தாயில்லை. முதலில் நீ யாரென்றும், நீ எத்தன்மையனென்றும், என்செய வல்லாயென்றும், எங்கிருந்து வந்தாய், எங்கு போவாய் என்பதையும் எனக்குத்தெரிவி. தன்னையே தானறியாத நீ! தலைவனை அறிதல் எங்கனம்? நீ, சில சமயங்களில், கடவுளைக் கண்ணாரக் கண்டவன் போன்று அவர் குணவிகிதங்களையும், அவர் செயல்களையும், அவர்தம் இருப்பிடத்தையும் வரை யறுத்து, உன்னில்கண்டு மயங்கினதோடு அமையாது, பிறரும் அதை நம்பும்படி பரைசாற்றுகின்றாய். அக்கடவுள் நீ நினைக்கும்படி அவ்வளவு கண்டப் பொருளாய், அகலநீள, உயரத்துக்கு அடங்கினவரல்லவே! காட்சிப் பிரமாணமான இவ்வுலகி லமைந்த நீ, அப்பிரமாணப் பொருப்பில் உனக்குள்ள பங்கு எவ்வளவில் எவ்வளவென்று ஆராய்ச்சி செய்து பார். அப்போது தான் உன் அறியாமை வெளிப்படும். அண்ட கோளங்களில் நீ வசிப்பதாயுள்ள பூமியோ! அணுவினும் அணுவிற்குச் சமானமாயிருக்கிறது. அதிலும் நீ வாழும் நாடோ! அவ்வணுவில் ஓர் பரமாணுவிற்குச் சமானம். நீயோ அப்பரமாணுவிலும் பரமாணுவாய் இருக்

கிறாய். நீ தானே கடவுளைக் கண்டு அவருக்கு மாறு இது, உறை இது என்று கற்பித்துக் கணிக்க வல்லவன். நீ உன் சிறுமையையும் அவர் தம் பெருமையையும் உன்னிப் பார். கடற்கரையிலமைந்த பெரும் மணற்குன்றில் ஓர் அணுவாம் மணற்றிரள்; மொத்த மணலையும் இத்தனை படி இருக்கிற தென்று கணக்கிடுமானால், எவ்வளவு உண்மையாகுமோ அப்படியன்றோ உன் ஆராய்ச்சியின் ஞானமும் அமைந்ததாகும். நீ என்ற எண்ணமும், நீ நினைத்துமுடிவிற்கு வந்த தீர்மானங்களும் யாதும் பயனிலவாம். நீயும், உன்னைச் சேர்ந்தாரும், நீ காணும் உலகங்களும், நீ அனுமானிக்கும் மற்ற எவையும், அவரிடத்தில் அடங்கினவையே. உன்னை உள்ளபடி ஆட்டுவிப்பவரும், அணைத்துக் கொள்பவரும் அவரேயன்றோ? நீ, நான் நானென்று மயங்குவரையும்; நான் செய்தேன், அவன் செய்தான் என்று சொல்லும் வரையும், அப்பேரில் பொருளைக் காணமாட்டாய். நான் என்பதை ஒழிக்கப் பார். நானே நானல்லன் என்று தேர். எவனொருவன் தன்னைப் பூரணமாய் மறந்து, தனக்கு வரும் இன்ப துன்ப போகத்திலும் தன்னில் மிக்க பரம் பொருள் ஒன்று உண்டு; அதனை அடைவேன், அது என்னைக் காப்பாற்றுமென்றெண்ணி, அதனில் அடைக்கலம் புகுவானோ, அவனே அவனைக் கண்டவன். கண்ட பொருளில் கண்டப் பொருளாய் கடவுளைக் கணிக்காதே. கடவுளை அறிய அவாவுதலினும் கடவுளை அணுக அவாவுதலே மேல்.

ஓம் தத் ஸத்

3. பலபொருள் ஒருகாட்சி

மனமே! நீ இவ்வுலகத்தில் எவ்வளவு பொருள்களைக் காண்கின்றாய். ஒரு பொருள் உருண்டையாய் இருக்கிறது, மற்றொரு பொருள் தட்டையாய் இருக்கிறது, ஒன்று சுடுகின்றது, மற்றொன்று குளிர்கின்றது, ஒன்று கண்ணிற்கு ரமணீயமாய் இருக்கிறது, மற்றொன்று பார்க்கப் பயங்கரமாய் இருக்கின்றது. இங்ஙனே பல பொருட்களும பலவிதத் தோற்றத்தையே காட்டுகின்றன. சில பொருள்களிடத்தில் உனக்கு அத்தியந்தப் பிரேமை உண்டாகிறது. சில பொருள்களிடத்து உனக்கு வெறுப்பேற்படுகின்றது. நுண்ணிய பொருளான இருளையும் வெளிச்சத்தையும் உன் மனப்போங்கு எப்படி அநுசரிக்கின்றதெனப் பார்ப்போம். இருளை முற்றும் வெறுக்கின்றாய், உனக்கு விருப்பமான வெளிச்சமொன்றே சதா உன்னைச் சூழ்ந்திருக்குமானால், உனக்கு ஆனந்த மிகுதியென்ப துண்டோவெனின் அதில்லையே! ஏன் நீ விரும்பிய

வெளிச்சமே உன்னைச் சூழ்ந்திருந்தும் ஆனந்திக்கின்றாயில்லை. இருளும் அடிக்கடி உன்னை வந்து தாக்கினால்தான் வெளிச்சத்தில் உண்டாகும் ஆனந்தமும் விக்சிதமாகின்றது. உன்கண்ணுக்கு அசங்கியமானபொருள் ஒன்றிருந்தாலன்றோ ரமணீயப் பொருளின் காட்சிஇன்பம் பயக்கும். குளிர்ச்சி இருந்தாலன்றோ உஷ்ணத்தின் பெருமைவெளிப்படும். இதனால் நீவிரும்புவதாயுள்ள எப்பொருளும், நீ அடைந்து அநுபவிக்கும் வரைதான் அதன் விசேடங்காண்கின்றாய். அடைந்த சிலபொழுதிலோ, அன்றி, சிலநாளிலோ அப்பொருளில் உனக்கு வெறுப்புவரக் காண்பாய். நீயே ஒருபொருளை விரும்புகின்றாய். வெறுக்கின்றாய். இதனால் உனக்கு எப்பொருள்தான் என்றும் நிலைத்த இன்பம் பயக்கும் பொருள். ஒன்றுமில்லையோ! இவ்வுலகத்தோற்றத்தில் அமைந்த ஒவ்வொரு பொருளும் ஒன்றை ஒன்று பற்றியே அவற்றின் விசேடமாகட்டும் விஷமமாகட்டும் பொலிகின்றதெனக் காண். அப்போதுதான் எப்பொருளும் அத்யாவசியமாக வேண்டப்படுவனவாம் எனக் காண்பாய். இதோடு எல்லாப்பொருள்களும் தாரதம்மியமின்றி ஒரே ஒரு பொருளின் சோபிதமெனக் காண்பனையாயின், அதிலும் மிக்க ஆனந்தம் வேறுண்டாமோ? காட்சிப்பொருளெவையும் தனக்குள்ளே எதனை ஆதாரமாகக் கொண்டுள்ளதெனக் கவனித்தனையாயினும், காட்சிப்பொருளை உன் நுண்ணிய அறிவாலும் அநுமானத்தாலும் பல பாகுபடுத்திக் கண்டனையாயினும், அப்பொருளிலும் அதற்கெனத் தன்னனந் தனியான தனிப்பொருள் ஒன்றில்லை எனவே நிட்சயமாம். ஏதோ நீ அறியக்கிடக்காத ஒருபொருளே, எப்பொருளிலும் நின்று நிலவுவது. ஆனதால் மனனே! நீ இன்றுமுதல் எப்பொருளையும் ஒரே ஒருஜோபிதப் பொருளின் சுகவடிவென்றே கவனி. அப்போது நீ வெறுப்பனவும் விரும்புவனவுமான பொருள் ஒன்றில்லா தொழிந்து, ஒரே ஒருபொருளாம். உண்மையில் உணர்ந்தால் ஒன்றே எங்குமுள்ளதாம்.

ஓம். தத். ஸத்.

4. துன்பம் துன்பமன்று.

—:o:—

மனமே! உனக்கு ஓர் துன்பம் வந்தகாலத்து வெகுவாய் மயங்குகின்றனையே. என்செய்வேன், எங்கு போவேன். எவர் என்னைக்காப்பார், என்று உன்னில் நீயே அங்கலாய்க்கின்றாய். நீ அனுபவிப்பதாயுள்ள துன்பங்கள் உன்னைத்தானே அடைந்தனவோ! பிறர் அடையச் செய்தனவோ! அன்றி நீதானே அடையும்படி செய்து கொண்டனையோ! இம்மூன்றில் உனக்

குற்றத்துன்பம் எங்கிருந்து உன்னை அடைந்தனவென யோசித்துப்பார். தானே அடைந்தனவானால், அத்துன்பம் எக்குணமுடையது, என்செய வல்லது, எப்பொழுதும் நிலைத்து நிற்கும் இயல்பினவோ? கொஞ்சநேரம் நின்று ஆட்சிசெய்து பின்னர் ஒழியும் தன்மையனவோ? என்று ஆய்ந்துபார். அப்போதுதான், துன்பமென்பது சாசுவதப் பொருளல்லவென்றும்; சிலபொழுது நின்று செயல் செய்யும் தன்மையனவென்றுங் காண்பாய். சில்பொழுது ஜீவித்துப் பிற்பொழுதில் மாயும் தன்மையான துன்பினுக்காகவோ, நீ, அவ்வளவு வருந்துகின்றாய். யுத்த களத்தில் நின்றும், பாணப் பிரயோகங்களுக்கு அஞ்சுமெவன் தான் சுத்தவீரனாவான்? மனமே திடங்கொள்! அஞ்சற்க! பிறரால் நேர்ந்த துன்பமாயின், பிறர் அறியாது செய்கின்றார் என்று அநுதாபப்படு. அத்துன்பங்கள் உன்னைத் தாக்காது, வந்தவழியே நோக்கிச் செல்லக் காண்பாய். அப்போது நீயும், துன்பமென்பது தன்னை விரும்புவாரையே தாக்கும் தன்மையது, சகிப்பாரைத் தாக்க வலியற்றது எனக்காண்பாய். நீதானே துன்பங்களை வருவித்துக் கொண்டனையாயின், யார்மேல் குறை கூறுவது. குற்றம் உன்னுடையதே. யாரை நோவது, உன்னை நீயே நொந்துகொள். துன்பம் தன் கூரிய நகங்களால் உன்னைப் பீறிடும் காலத்திலும், அதில் சதா அழுந்தும் போதும், துன்பரகிதனான ஒரு சிநேகனை அண்டப்பார். இவ்வுலகில் அரசனாயினும், ஆண்டியாயினும் துன்பத்தில் துன்பப்பட்டவர்களே! துன்பம் ஒரு சிறிதும் அநுபவித்தறியேன் என்று சொல்லும் ஜென்மி, ஒருவனும் கிடையாதெனக் காண். துன்பமே உலகு பூராவும் நிறைந்திருப்பதாக அறிவிலிகள் காண்கிறார்கள். துன்பமென்னும் ஓர் தனிப்பொருள் இல்லை என்று, சில அறிஞர் சொல்லும் நல்லுரையை, நீ என்றேனும் கேட்டிருக்கின்றனையா? அப்படியானால் இல்பொருளான துன்பத்தை உள்பொருளாகக் கொண்டு வருந்தும் உன் மாற்றம் என்னே! நீ எவ்வளவு மூடன் என்பதைக்கவனி. உன் கற்பனை மாத்திரத்தாலும், பிறர் அறியாமையினாலும், உன்னைச்சில சமயங்களில் துன்பமென்னும் அலைகள் நெருங்குமாயின், நீ! ஓடி ஒளிக்காது எதிர்த்து நின்று ஜெயம் பெறப்பார். எவனொருவன் துன்பம் ஒழித்து சுகம் பெற எண்ணுகின்றானோ, அவன், எப்பொருளானது துன்பரகிதமாயும், சோபிதமாயும், சுகவடிவாயும் நிற்கின்றதோ, அதைப்போய் அடையவேண்டும்; அன்றே; அக்கணமே அவன் துன்பங்களெல்லாம் இரிந்தோடும்.

ஓம். தத். ஸத்.

5. அன்பின் மயம்.

மனமே! அன்பே உலகமெல்லாம் நிறைந்திருக்க அன்பை அடையவேண்டு மென்று அங்கு மிங்கும் ஓடி அலையும் உன் அறியாமை என்னே? அன்பில்லாமல் உலகமுண்டா? நீயும் நானும் அவ்வின்ப அன்பின் சோபிதந்தானே! அன்பின் மயத்தாலன்றோ சூரியன் பிரபை வீசுகின்றான். சந்திரன் தண்ணொளி கொடுக்கின்றான். தாராகணங்கள் தம் தம் நிலையில் நிற்கின்றன. அன்பில்லாவிட்டால், கணவன் காதலியையும்; தாய் பிள்ளைகளையும் நேசிப்பார்களா? உற்று நோக்கினால் உன் சடமே அவ்வன்பின் பிணைப்பினாலன்றோ ஒன்று பெற்றிருக்கின்றது. எங்கும் நிறைந்ததாய், எப் பொருளினு முள்ளதாயுள்ள அவ்வன்பை நீ தேடி அலைய வேண்டிய நிமித்தமென்னவோ! கையில் பொருள் வைத்துக்கொண்டு, வறுமையில் உழல்கின்றேனென்று சொல்லும் கண் கெட்ட குருடனோ நீ. நீ ஒருபொருளில்இச்சை வைக்கின்றாய், அதையடையவேண்டிப் பல முயற்சியும் செய்கின்றாய், அப்பொருள் கிட்டின காலத்து மகிழ்கின்றாய், கிடையாக்காலத்துக் கலுழ்கின்றாய். உன் அறியாமையால் உன்னிடத்து உள்ள பொருளையே நீ காதலிக்கவும், வெறுக்கவும் செய்தாய். என்றும் உள்ளதாயுள்ள பொருளெதுவோ அதுவே, எங்கும் நிறைந்த பேரன்பின் மயமாயுள்ளது. அன்புடையவர்க்கே எல்லாம் உடையதாம். அன்பைவிட்டு நீ அகல எண்ணினாலும், அது உன்னை விட்டு அகல எண்ணுவதில்லையே! நீதானே அன்பு வேறு, நீ வேறு என்று எண்ணுகிறாய். அன்புருவாம் பரசிவம் உன்னைப் பூரணமாய் விழுங்கி நிற்கவும் கண்டாயில்லையே. அன்பை, பொருளைக் கொடுத்தும், போகத்தை விடுத்தும் மாற்றுகப் பெரும் பாக்கியம் கிடையாவே. அன்பை அன்பினாலன்றோ பெறுதல்வேண்டும். நீ அன்பை அடைய விரும்புவையானால், உன்னிடத்து உள் பொருளான அன்பை எப் பொருளிலும் செலுத்திப்பார். அப்போதுதான அவ்வன்பின விகசிதம் காண்பாய். அன்பின் வழி நின்றோரே மேலோர். முக்காலமும் கடந்து எக்காலமும் நீ ஜீவிக்க விரும்பினால், அன்போடு ஐக்கமுறு. காடு மலை வனாந்திரங்களில் வாழும் கொடிய விலங்கினங்களுங்கூடத் தன்னைச்சுற்றிய தன்னவரோடு, அன்பை பெருக்கி வாழ்கின்றனவே! அறிவுடை ஜென்மியான நீ! அன்பைப் பெருக்கிக்கொள்ளாதது என்னே! அன்பை உன்னில் வேறுக்கிக்கொண்டு அன்பெங்கே! அன்பெங்கே!! என்று நீ அலைய வேண்டுவதினறே. நீ காணும் எப் பொருளிலும் அவ்வன்பின் மயம் பிரகாசிக்கின்றதே. நீ உன்னில் மேலோர்பால் காட்டும் பிரீதியும், உன் சமத்தோர்பால் காட்டும் தயையும், உனனில் தாழ்ந்தோர்பால் காட்டும் அநுதாபமும் அவ்

வன்பின் சில கதிர்களேயாம். அன்பில்லார்க்கு இவ்வுலகில் எது தான் சாசுவதம். எல்லாம் துன்பமாயன்றோ ஆகும். அன்புடைமை, தன்னதையும் பிறர்க்குக் கொடுக்க அஞ்சுமா? அன்பைப் பெருக்கி உன் ஆருயிரைக் காக்கவன்றோ அன்புருவாம் சிவம் கங்கணங்கட்டிக் கொண்டு நிற்கிறது.

ஓம். தத். சத்.

6 பூரண சுகம்.

மனமே! நீ எங்கும் பூரணமாய் நிறைந்து எத்தொழிலையும் செய்ய விரும்புகின்றனையா? நீ செய்யும் ஒவ்வொரு செய்கையிலும், மிகுந்த பலனடைவேண்டுமென்ற அவா உனக்குண்டா? நீ துன்பம் ஒரு சிறிது மின்றி சதா இன்பத்தில் வாழ விரும்புகிறாயா? ஆயின், நீ செய்ய வேண்டிய ஒருகடமை மாத்திரம் உண்டு. அதனைச் செய்துமுடி. அப்போது எல்லா சித்திகளும், எல்லாச் சுகங்களும், உன்னை வந்து அடையும். நீ என்ற நின் தன்மையைப் பூரணமாய் மறந்துவிடு. இது ஒன்றே பரமரகசிய மானது. நான என்னை மறந்து விட்டால் சுகம் அடைவதெப்படி, என மருள்வாயோ! ஆம்: அம்மருள் மலிந்து உன்னைச்சூழ்ந்திருப்பதனாலேயே அதன் வசம் இழுக்கப்பட்டிருக்கிறாய். நீ மருளான மாயத்தோற்றத்தின கண் பற்று வைத்து, அதனை அடைய வேண்டுமென்று முயற்சிசெய்யும் வரையும் அது உன்னை ஏய்க்கப் பார்க்கும். உன்னை விட்டுத் தூரத்தூர ஓடி உன்னையும் இழுத்துச்செல்லும். நீ எப்பொருளிலாவது இச்சை வைத்து அதற்காக பன்னாட்கள் முயற்சி செய்கின்றாயோ, அதனால் உனக்குத் துன்பமே ஒழிய சுகமில்லை. ஆசையென்னும் பெருங்காற்றில் அவதிப்பட்டு அலைந்து கொள்ளாதே. இதுகாறும் அவ்வாசைப் புயல் உன்னை ஆட்டி அலக்கழித்தது போதாதோ. மனமே! ஆசைகளை அடக்கப்பார். பின் எப்படித்தான் சுகம் பெறுவதென்று ஐயுறாதே! நீயோ! ஏக பரிபூரணமான தனிவஸ்துவின் பிரதிபிம்பமா யிருக்கின்றாய். அவ்வேகப்பொருள் எது செய்ய வல்லதோ, அவ்வளவு சக்திகளும் உன்னிடத்திலும் குப்தமாய் அடங்கிக் கிடக்கின்றன. நீ காணுகின்றதாயுள்ள உலகங்களும், உலகப் பொருட்களும் அவ்வேக வஸ்துவின பரிணமமே யன்றி வேறல்ல. நீ உன்னைத் தனியாகப் பிரித்து, உனக்கென்று தனிச்செயல் வேண்டுமென்றும், தனிச் சுகம் வேண்டுமென்றும் கருதுவையானால், அப்போது தான் துன்பம் உன்னைச் சூழ்ந்து கொள்ளுகிறது. சுகப் பிராப்தி

உன்னை யடையப் பயப்படுகின்றது. எல்லோரும் இன்புற்றிருக்க நீ கருதுவையானால், உன்னை அறியாமலே பூரணசுகம் உன்னை வந்தடையக்காண்பாய். சுகம் இது, துக்கம் இது என்று வரையறுத்துக் கொண்டு, சுகத்துக்கு மாத்திரம் விரும்பியும், துக்கத்துக்குப் பயப்படுவையானால், அப்போதுதான் துன்பத்தின் செயல் மிகுதியாகும். எங்கும் சுகவடிவாம் பரம் பொருளின் ஜோதிப் பிரகாசத்தின் ஒரு கதிராக, உன்னைக் கருதிக்கொள். அது தானே உண்மையிலும் உண்மை. உண்மையை மறந்து உழல்வானேன். எப் பொருளானது யாதொரு விகற்பமும் வெறுப்பு மில்லாதா யிருக்கிறதோ, அதனின்று ஜனித்த நீ, ஜன்மதேசத்தை மறந்து சஞ்சலப்படுகிறாய். உன் சஞ்சலம் ஆதாரமற்றது. அதனால் எங்கும், எவ்விடத்தும் நீ பரிபூரணனாயிருக்க விரும்பினாலும், சதா இன்பம் பெற விரும்பினாலும், நீ செய்யுங் காரியங்களில் அழிவில் சித்தியடைய விரும்பினாலும், திடன் கொண்டு உன்னை மறந்து, உன்னை உற்ற பொருளெதுவோ அதன் மயமாக இரு. அன்றே ஆனந்தம். அன்றே சுகம்.

ஓம். தத். சத்.

7. மனத் திருப்தி.

என்றும் திருப்தி யுடையோரே மேலோர். திருப்தி என்பது அவரவர் மன நிலைக்கு ஒத்ததாகவே யிருக்கிறது. வறியனொருவனுக்கு வயிரார உண்வு கிடைத்தால், திருப்தி யடைகின்றான். வழிப்போக்கனுக்குத் துணைக்கு ஓர் ஆள் கிடைத்தால், மகிழ்கின்றான். மன்னர் தங்குடிகள் யாதொரு சச்சரவு மில்லாமல் வாழ்ந்தால், தன்னாட்சியில் திருப்தியாயிருக்கிறார்கள். ஆனால், இவைகளெல்லாம் அவ்வப்போது திருப்தியைக் கொடுக்கின்றனவே யொழிய, பிற்பாடு, கிடைத்த பொருளில் திருப்தி கெட்டு, மேலும வேறொன்றில் திருப்திபெற எண்ணுகிற தொழிலே, எல்லா ஜீவர்களிடத்தும காணப்படும் உண்மையாக இருக்கிறது. இதனால் ஒரு பொருளில் மகிழ்வதும், அப்பொருளிலேயே திருப்தி யடையாமலிருப்பதும், என்ன விந்தை! இதை நோக்கினால் ஏதோ ஒரு பொருள் எல்லா திருப்திக்கும் சமபூரணமா யிருக்கவேண்டு மென்றாவது; அல்லது ஜீவர்கள் திருப்திக்காக வேண்டும் பொருள் ஒன்றில்லை என்றாவது; கொள்ளக் கிடக்கின்றது. அப்படித் திருப்தி செய்யப்படுவதா யுள்ள பொருள் ஒன்றில்லையானால், கிருமி, கீடங்களும், தாவரங்

களும் எப்போதும் முன் நோக்கில், செல்லக்காரண மில்லையே. மனிதன் ஒருவன் தான் முன் நோக்கில் செல்லும் இயற்கைக் குணம் படைத்தவனு யிருந்தும், வழியில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைக் கண்டுபின்னடைகிறவனுயிருக்கிறுன். ஏன்? இவன் பேராசைகொண்டு உலகப்பொருள்களெல்லாம் தன்னதாக்க எண்ணுகின்றுன். அதனுல் தான் இவனுக்குத் திருப்தியில்லா தொழிகிறது. மனமே! நீ, திருப்தியை உன் சாஸ்வத மாக்க வெண்ணுகிருயா? அப்படியாயின், உனக்கு எது எது எவ்வெப்போது வந்து உன்னைப் பொருந்துகிறதோ, அதை அவ்வப்போதே அனுபவித்துக்கொள். கிடையாப் பொருளுக்காகவும் கலங்காதே, கிடைத்த பொருளுக்காகவும் மகிழாதே. உனக்கு எது எது தேவையோ, அது உன்னைப் பொருந்தக் காத்துக்கொண்டிருக்கிறதே. வருவது வந்தேதீரு மென்ற முழு நம்பிக்கையை உன்னூன்று கோலாய் நட்டுக்கொள். தீயது உன்னைத் தாக்கினும், நல்லது உன்னைத் தாக்கினும், நீ சிரித்துக்கொண்டு மகிழ்ச்சியாயிருக்கப் பழகு. அப்போது தீயதாகட்டும், நல்லதாகட்டும் உன்னை யாதொரு துன்பமும் சுகமும் செய்யாதிருக்கும். ஆம்; தீயதை வெறுக்கின்றேன்; சுகத்தையும் வெறுக்கவேண்டுமோ என்று ஐயுறுவாயோ? சுகத்தின் அடியில் துன்பமும்; துன்பத்தின் அடியில் சுகமு மன்றே மாறி மாறி அமைந்து கிடக்கின்றது. நீ ஒரு சுகத்துக்கு மகிழ்வாயானுல், துன்பத்துக்கும் மகிழ வேண்டும், சிரிப்பாயானுல் எப்பொழுதும் சிரிக்கவேண்டும். இதைவிட்டு நீ கலங்கினதால் பயனென்னை? எல்லாப்பயன்களையும் சீர்தூக்கி, எது எது உனக்கு வேண்டியதோ அதைக்கொடுக்கச் சமபூர்ணத் திருப்தியுடைய பொருள் வேறுண்டு. அதனிடம் உன் பூர்ண திருப்தியைப் பெறு.

ஓம் தத் ஸத்.

8. நகை வியாபாரி.

நான் ஒருநாள் நகை வியாபாரி ஒருவனிடம் சில நகைகள் வாங்கச் சென்றேன். அவன் பொன்னிலுைம் வெள்ளியினுைம் செய்த அநேக நகைகளை எனக்குக்காட்டினுன். அவைகளில் சிலவற்றை எனக்கென பிரத்தியேகமாய் எடுத்துவைத்துக்கொண்டு, அதன் விலை என்னவெனக்கேட்டேன். "நாலாயிரம் பொன்" என்றுன். அவ்வளவு பெருந்தொகையை அவன் சொல்லவும் நான் திடுக்கிட்டு வியாபாரியே! நீ செய்து வைத்திருக்கும் நகைகளின் இடைக்கு எவ்வளவு பொன்னிறை இருக்கிறதோ அவ்வளவு வாங்கிக்கொள்ளக் கூடாதா? இந் நகைகளை

மொத்தமாய் இடைபோடு என்றேன். அவன் முணுமுணுத்துக்கொண்டே இடைபோட்டு இரண்டாயிரம் பொன்னிடை நிறுத்தக் காட்டினான். இரண்டாயிரம் பொன்னிடையுள்ள இந் நகைக்ளுக்கு நீ நாலாயிரம் பொன் கேட்பது அநியாயம் என்றேன். அவன் மிகுந்த கோபாவேசனாய் "நன்றாய் பேரம் பண்ண வந்துவிட்டீர்; போம் போம். இடைக்கிடையா நகை கொடுப்பேன். நான் இப்பொன்னை எவ்வளவு அழகாய், பூ போலவும்; காய்போலவும், கனிபோலவும், மரம்போலவும், செடிபோலவும், மயில்போலவும், குயில்போலவும், யானைபோலவும் சிங்கம்போலவும் இன்னும் எத்தனைவிதமாய் எல்லாம் பல நாள் கண்ணும் கருத்துமாயிருந்து செய்திருக்கின்றேனே, உமக்கு கண்ணில்லையா? அவைகளை உற்றுப்பாரும்" என்றான். நான்கட்டளைப்படி உற்று நோக்க அத்தனை ரூபங்களும் அமைந்திருந்தன. நான் மலர் போன்றிருந்த ஒரு நகையை எடுத்து, வியாபாரி யறியாமலே முகர்ந்து பார்த்தேன்; அதில் வாசனையில்லை. கனிபோன்றிருந்த ஒன்றை வாயிலிட்டு சுவைத்துப்பார்க்க, சுவையில்லை. சிங்கம்போன்றிருந்த நகையை எடுத்து அதின் வாயில் கையை வைத்தேன், கடிக்கவில்லை. இப்படியே ஒவ்வொன்றையும் அதனதன் தோற்ற செய்கைகளைச் சோதனைசெய்தேன் அந்நகைத் தோற்றம் தான் அமைந்துள்ள ரூப செய்கைகளை செய்யக்காணோம். எனக்கோ! ஆச்சரியமாயிருந்தது. பின் வியாபாரியை நோக்கி, நண்பரே! நீர் பிரயாசைப்பட்டு ரூபகரப்படுத்தியிருக்கிற இந் நகைகள் அதனதன் செய்கைகளைச் செய்யக்காணோமே: இதற்கேன் அதிகப்பொன் கேட்கிறீர், இடைக்கிடை பொன்வாங்கிக்கொண்டு கொடும், உமக்கு நஷ்டமில்லை என்றேன். அவனுக்கு வந்தகோபத்துக்கு கங்கு கரையில்லை. என்னை பயித்தியக்காரன் என்று திட்டினான். நான் அவனைப் பைத்தியக்காரன் என்று எண்ணி சிரித்துக்கொண்டே நண்பரே! கோபம் வேண்டாம்; எதாவது ஒரு நகை கொடுமென்று ஆயிரம் பொன்னிடை யிருந்த ஒன்றை எடுத்துக்கொண்டு இரண்டாயிரம் பொன்கொடுத்தேன். வியாபாரி ஒன்றுக்கு இரண்டத்தனை பெற்றுக் கொடுத்த நகையை நான் வீட்டுக்கு கொணர்ந்து, ஓர் உலையிலிட்டு உருக்கினேன். தோற்றமாத்திரையில் பல ரூபங்களாக இருந்த நகை பூராவும் உருகி, ஒன்று சேர்ந்தது. அதனிலமைந்த ரூபங்கள் எங்கு ஓடி மறைந்தன? நான் கொடுத்த ஆயிரம் பொன்னிடைதானிருந்தது. என்ன ஆச்சரியம்? நான் கொடுத்த பொன்னுக்கும் இப்பொன்னுக்கும் பேதமில்லையே? ரூபங்களெங்கே? வியாபாரியிடம் நான் ஏமாப்படைந்தேனோ?

ஓம். தத். சத்.

9. சஞ்சல நிவர்த்தி.

மனமே! நீ சஞ்சலப்படுகின்றனையே. உனக்கென வைத்திருந்த எந்தப்பொருளையாவது இழந்து விட்டனையா? உனக்கென உறுதியாக எப்பொருளை வைத்திருந்தனை? க்ஷணத்துக்கு க்ஷணம் நீ காண்பதாயுள்ள எல்லாப் பொருட்களுமே உனக்கு வேண்டுமென்று அவாவினை. அவற்றுள் சில உன்னைப் பொருந்தின, சில உன்னைவிட்டு அகன்றன. உன்னில் அடைந்த சில பொருளும், காலவதியில் உன்னைவிட்டு அகன்றபொழுது கலங்குவானேன். எல்லாப் பொருட்களும் உன்னையல்லாமல் வெளியில் நின்று வந்ததுதானே? அங்கனமாயின் உன்னிடத்தில் எப்பொருளும் முதலில் இருந்ததில்லையே? இடையில் வந்ததாயுள்ள நீ, ஆசையோடு அநுபவித்த பொருள், இடையிலேயே கழிந்து போனதற்காக வருந்துவானேன். மனமே! நின் நித்திரையையும், சோம்பலையும் விட்டு எழுந்திரு. திடங்கொள்! உலகப் பொருளாயினும், வானின் பொருளாயினும் உனக்கு யாதொரு சுகத்தையும் கொடுக்க வல்லதல்லவே. நீ வானிற்கிறைவனாய் மேகமண்டலங்களை அடக்கியாள வல்லோனாயினும் சரி, நரகத்திற்கிறைவனாய் துக்கமே சதா குடிகொண்டு உழன்றாலுஞ் சரி, இரண்டிடத்தும் சுகமென்பதும் சிறிதுமில்லை, துக்கமென்பதும் சிறிதுமில்லை. நீ தானேயாய் சுக துக்கங்களை எண்ணி கலுழ்கின்றாய், மகிழ்கின்றாய்; மயங்குகின்றாய். நின் மயக்கதிற்குக் காரணம் என்னவென ஆராய்ந்து பார். நீ ஆசை வைப்பதாயுள்ள எப்பொருளும் உன்னிடம் சில நாள் நின்று உன்னைவிட்டு ஓடும் தன்மையனவேயாம். நின் ஆசையும், அவாவும், பூரண நிலையை அடைய விரும்புமாயின், எந்தப் பொருளானது ஆசைக்கும் அவாவிற்கும் அன்னியமானதோ, அப் பொருளைப்பற்றி நிற்க வேண்டும். "வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பையில" என்ற நல் வாக்கைக் கவனி. நீ பற்றிக் கிடக்க வேண்டியதான ஒரு பொருள், எங்கும் இலவசமாய் நின்று தழும்பிக் கொண்டிருக்கிறதே! அதனை நீ பற்றின அன்றே பற்றுக்களெல்லாம் பறந்தோடும். எப் பொருளிலும் பற்றற்றவரே பரம் பொருளோடு ஒன்றப் பாக்கியம் பெற்றவர். அதனால் மனமே! நீ கலங்கலை. கண்ணீர் உகுத்தனையாதே! நின் சஞ்சலம் எவ்வளவு ஆதாரமற்றதென நோக்கு. சஞ்சல ரஹிதனான பரம பிதா உன்னை விட்டு ஒரு க்ஷணமும் பிரிய எண்ணுவதில்லையே. ஆனால் அவன் பிரிந்து நிற்பதாக நீதானே கற்பனை செய்துகொண்டு சஞ்சலப்படுகின்றாய். நின் சஞ்சலமெல்லாம் நீதானே தேடிக்கொண்டு சஞ்சலத்திற்காக மூலையிலுட்கார்ந்து முக்காடு இடுவதால் பயனென்னையோ! ஆனதால் நின் சஞ்சலத்தைத் தவிர்.

மனனே! நின்னால் தான் நானுங் கிருதார்த்தன் ஆகவேண்டும். உன்னையல்லால் எனக்கு உற்றதுணைவர் ஆருளர். நீ நைந்தால் நானும் மயங்குவேன்: கைசோர விடாதே: கடுகி வழி நடந்து என்னோடு சஞ்சல ரகிதனெவனோ அவன் தண்ணடியைச் சேர விரைக, மனனே! விரைக.

ஓம்· சத்· சத்·

---

10. சாந்த சோபிதம்.

---:o:---

ஓம் சாந்தி! சாந்தி! பரமசாந்தி என்று பெரியோர்கள் சொல்லும் வார்த்தையினை நீ என்றேனுங் கேட்டிருக்கின்றனை யா? அப்படியாயின் அதன் கருத்தென்ன வென என்றைக்கே னும் ஆராய்ந்தனையா? பெரியார் வீணே அவ்வார்த்தையினை உரைக்கின்றனரா? அன்றி அவ்வார்த்தைகளால் ஏதாவது அநுபவிக்க நமக்கு கற்பிக்கின்றனரா? என்று உன்னிப்பார். சாந்தமென்பது மனம் ஓர் நிலைப்பட்டு, சர்வ சாந்தமாகிய ஒருபொருளில் தன்னைச் சரண்புகவிட்டு, தன்னில் தானே சாட்சியாயிருப்பதாகும். ஒருவனுக்கு எத்துணை துன்பம் வரினும், இன்பம் வரினும், மயங்காமலும், மகிழாமலும் சாந்தமாய் பொருத்துக்கொள்ளவேண்டு மென்பதே அதன் உபதேசமாகும். அதோடு பரம சாந்த சீலர்கள், அச்சாந்தத்தின் உண்மை நிலை இன்னதெனக் கண்டு அதோடு சாந்தி பெறுகின்றனர். மனமே! உனக்கும் அவ்வாசையில்லையா? இல்லையாயின் உனக்கு வரும் துன்பங்களுக்கும் கணக்கில்லை. எந்த மூடனாவது துன்ப சாகரத்தில் சுழல எண்ணுவானே? எனினும் துன்பங்களெல்லாம் நீ சுகமெனக் கருதுகின்றனையா? என்றைக்கும் துன்பமான ஒரு பொருள் துன்பத்தையே கொடுக்கும தன்மையதேயாம். துன்பம் நீங்கிச் சுகம்பெற எண்ணும் ஒருவன், சுகப் பிராப்திக்குக் காரணமான சுகவடிவாம் சுத்த சாந்தத்தை தரிசிக்கவேண்டும். சுத்த சாந்தப் பொருள் உன்னைச்சதா சூழ்ந்திருக்கிறதே! அச்சாந்தப்பொருளை நீ தேடியலையவேண்டிய நிமித்த மில்லையே. உன்னை வெளியும் புறமும் கூடஸ்தமாக மூடிக்கொண்டிருக்கும் அப் பரம சாந்தத்தை, உன்னை நீயே கேட்டு அடைந்துகொள். உனக்குள்ள ஒரு பொருளை நீ பிறரிடம் கேட்டு அடைய முடியுமோ? நீ உன்னிடத்து அப் பரம சாந்தப் பொருளைக்கண்டு அநுபவித்திரு. அப்போதுதான், "ஓம் சாந்தி சாந்தி" என்றசொல் நிதரிசனமாகும். இனி இச்சாந்தத்தினை அடையக் காடு மலை வனாந்தரங்களிலுள்ள கல் குகைகளில் நீ வசித்தாலுஞ்சரி; மாடமாளிகை கூட

கோபுரமுள்ள பட்டணங்களில் வசித்தாலுஞ்சரி. சாந்தியை சாந்தியின் பொருட்டே அனுபவிக்க நீ உன்னை அந்தர்முகமாய் நோக்கினாலன்றி அடைய மாட்டாய். அந்தர்முக நோக்கம் நீ எளிதில் பெறும் பொருளல்ல. நீ என்பதை முற்றும் மறந்து, நின்னிடத்துள்ள ஆசை யெனுங் கள்வனை ஜெயம் பெற அடித்துத் துரத்தி, பிரவிர்த்தி என்னும் தொழிலையும் பூராவும் விட்டு உதறி, நின்னை நீயே நோக்கவேண்டும். மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்னும் முதுமொழி போன்று, தினமும் ஆய்ந்து ஓய்ந்து நிற்கப்பழகு. அப்போதுதான் உன்னையும் அறியாத பரம சாந்தப் பொருளின் பலதுறைகளைக் காண்பாய். கண்டு மகிழ்வாய். அவன் அருளாலே அவன் தாள் வணங்கி அப்பேரில், பெரிய சாந்தப் பொருளை, அனுபவிக்க வேண்டும், நீ என்றும், நான் என்றும், அவனென்றும் உள்ளவரையில் பரம சாந்தம் நின்னிடம் சித்திக்காது. அவனே சாந்தன், அவனே சாந்தி, அவனே சாந்தவிகிதன் எனத்தெளி, அன்றே, ஓம் சாந்தி, சாந்தி, பரம சாந்தி கைவல்ய மாம்.

ஓம். சத். சத்.

11 சித்திரக் காட்சி

—(o)—

நான் ஒரு நாள் ஒரு சித்திரீகன் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவன் முன்னே பெரிய பலகை ஒன்றிருந்தது. சில வர்ணங்களையும், தூலிகைகளையும் ஒரு பெட்டியினின்று எடுத்து, அவைகளை ஒன்றோடொன்று மிசிரமித்துக்கொண்டு பலகையில் தீட்ட ஆரம்பித்தான். அங்கு சில கோடுகளும் இங்கு சில கோடுகளுமாகச் சில வர்ணங்களைப் பூசிக்கொண்டே வந்தான். அவன் அப்பலகையின் பல இடத்தில் பல ரூபங்களை தத்ரூபமாக எழுதினான். பலகை பூராவும், பல மனிதரூபங்களும், பல மிருகங்களும், பல பட்சி யினங்களுமாகவும், சோலைகளும், மாடமாளிகைகளும், வான மண்டலங்களும் அதிற் செல்லும் மேகத்திரள்களுமாக சில பொழுதில் வர்ணந்தீட்டி முடித்தான். கண் கொட்டாது பார்த்துக்கொண்டிருந்த எனக்கு அவன் எப்பெப்பொழுது எந்த எந்த ரூபத்தை வர்ணந்தீட்டினனோ அப்பப்போது அப்பொருட்களே என் கண்முன் பிரத்தியட்சமாயிருப்பது போலவே தென்பட்டது. அதில் ஓர் இடத்தில் ஓர் பெண் ஆடவனொருவனை பரிதாப முகத்தோடு கெஞ்சி மன்றுடுவது போலவும், அவ்வாடவன் அம் மன்றாட்டத்துக்கு சிறிதும் இரக்கமில்லாதவன் போன்றிருந்தாலும் தூரத்தே நிற்

கும் மற்றோர் பெண்ணிடம் தன் கவனத்தை செலுத்தியவனுய்க் காணப்பட்டான். அவ்வாடவனை நான் வெறுத்தேன், பார்க்க மனமில்லை. மற்றோரிடத்தில் சிலவாலிபரும், யௌவனப் பெண்களுங் கூடிக்குடித்து குதூகலமாயிருக்கக் கண்டேன். ஐயோ! இவ்வாலிபர் ஏன் இப்படிக் கெடுகிறார்களென்று எண்ணி அதையும் பார்க்க மனமில்லை. இன்னொரிடத்தில் ஓர் தாய், தன்னந்தனியளாய் தன்னருமை மகனை மார்போடணைத்து கருணை முகத்தோடு பாலூட்டி மகிழக்கண்டேன்: என்னகருணை! என்ன அன்பு என்று மகிழ்ந்தேன். பிரிதோரிடத்தில் அம்பும் வில்லுந்தாங்கிய சில வேடர் ஒரு மானைத் துரத்திக் கொண்டோடவும், அது மிரண்டு ஓடித் தத்தளிப்பவும், பக்கப்புதரினின்ற ஓர் சிங்கம் வேடன் ஒருவன்மேல் குபீரெனப்பாய்ந்து அவனைத் தன் கூறிய நகங்களால் பீறிட, அவன் தேகத்திலிருந்து இரத்தம் ஆருகப் பெருகவும் கண்டவுடன், எனக்கு என்னையறியாமலே அநுதாபமேற்பட்டு, சித்திரீகன் பக்கத்திலிருந்த வாண்ந் தீட்டும் கத்தியை எடுத்து, அச்சிங்கத்தின் முகத்திலே குத்திவிட்டேன். அப்போதுதன் வேலையின் போக்கிலே கவனஞ்செய்து கொண்டிருந்த சித்திரீகன், உடனே, தம்பீ! என்ன செய்துவிட்டீர், என் வேலையைக் கெடுத்து விட்டீரே! என்று ஓடிவந்து என்னைக் கோபித்துக்கொண்டான். அப்பொழுது, நான் அவனைப்பார்த்து இக்கொடிய மிருகம் ஒருமனிதனை வதைக்கப்பார்க்கலாமா? வென்றேன் நல்லது தம்பி! இது சித்திரந்தானே! நான் கற்பித்து எழுதினேன், நீர் கெடுத்துவிட்டீர். அளித்து விடுகின்றேன் என்று படம் கெட்டுப்போயிற்று, பலகையாவது மிஞ்சட்டுமென பூரா வர்ணங்களையும் மற்றோர் தூலிகையால் அழித்துவிட்டான். என்னே! அங்கு நான் கண்டதாயுள்ள தோற்றங்களெங்கே? பழைய பலகை தானேமிச்சமாயிருந்தது

ஓம். தத். சத்.

(o)

12. மரண பயம்.

(o)

மரணம்! ஐயோ மரணம்! என்ற சப்தத்தை நின் காதில் கேட்ட மாத்திரத்தில், நீ கலங்கும் கலக்கமென்னே! மரணம் உன்னைச் சந்திக்க வரும் போது மனத்திடங் கொண்டு எதிர்த்து நிற்க வலியற்றவனுய், வாய் குழறி நீ நடுங்கும்போது உன்னைக்காண எவ்வளவு பரிதாபமாக இருக்கிறது. மனனே! மரணமென்பது உன் சடத்தைக் கொள்ளை கொள்ள வருகின்றதா? அன்றி உன்னையே கொள்ளை கொள்ள வருகின்றதா? என்று

உன்னிப்பார். உன் ஜடமானது நீ கொடுத்தபோஷணையாலும், நீ நடத்தின நடத்தையாலுமே வளர்ந்த தன்ருே? உன்னிடம் உபகாரம் பெற்று, உன்னிடம் அடங்கிக்கிடக்க வேண்டியதா யுள்ள சடத்தை, உன்னையே ஆட்சிபெற செய்து விட்ட தீமை யாலன்ருே, மரணம் உன்னைச் சந்திக்கும்போது மயங்க நேர்ந் தாய். ஜடத்தில் நீ பற்றுவைத்து, அது நிலைபெறும் வரையன் ருே உன்னையும் சனிபிடித்தலைக்கிறது. ஜடப்பொருளாகிய கை, கால் முதலிய உறுப்பினங்களையே, நீ! உன்னதாய் மயங்கு கின்ருய். ஜடம்வேறு, நீவேறு என்னும்சடபோஷணைப் பொருட் கள் கடன்வாங்கி யிருந்தபடியே கடனை அடைக்கவேண்டிய காலம் வந்து விட்டதற்காக மகிழ வேண்டிய நீ, ஐயோ! மயங் குகின்ருய். கடன் கொடுத்தவன் உன்னை விட்டு விடுவாஞு? கடனைக் கொடுக்காது ஏய்க்க உன்ஞல் இயலுமா? ஒரு நாளும் முடியாதே. என்றைக் கிருந்தாலும் நீ இறக்கவேண்டியது நிக்ஷயமே. எல்லா உண்மைகளிலும், பெரிய உண்மை எது வென்று நீ அறியாயோ! அது எவஞெருவன், எப் பொருள் பூமியில் ஜனிக்கின்றதோ அன்றே, அதோடே, இறக்க வேண்டி யதும் ஜனித்ததாகின்றதேயாம். இவ்வுண்மையை மறைக்கப் பார்ப்பது எவ்வளவு மதியீனம். உண்மையை அறிய அவாவிப் பன்ஞள் பாடுபடும் நீ, முதல் உண்மையை மறந்து மரணத்தை வெறுக்கக் காரணமேன். உன் கவலைகளும், ஆசைகளும் இம் மரணத்தையன்ருே தனக்கு ஓய்விடமாகக் கருதி. எதிர் பார்த் திருக்கின்றன. மரணமென்னும் தோழனிலும் உனக் குற்ற தோழன் இவ்வுலகில் வேறு யாரிருக்கிருர்கள். அவன் உன்னை நீ, ஓயாது சலித்தலிலும், மயங்கலிலும் நின்று காப்பவனன்ருே? அவனே உன்னைப் புடமிட்ட பொன்போன்று பிரகாசிப்பிக்கச் செய்ய வல்லவன். உன்னை உன்தற்காலப் பதவியினின்றும் மேல் பதவியில் வைக்க தகுந்தவன். நீ, அவனேடு உறவுகொண்டால் அவன் உளவை அறியலாம். நீ, அவனுக்குப் பயந்தால் அவன் உன்னையே மேலும் மேலும், மேற் கொள்வான். எல்லாச் செயல்களும், எல்லாச் சடங்களும், எல்லா இடங்களும், எல்லா நிலைகளும் ஒழிந்த அன்றன்ருே, எங்கும் பூரணமான சோதி யின் தத்வ நிலை தெளிவாம். ஆனதால் மனனே! மரணத்துக்கு நீ அஞ்சா திருக்க வேண்டுமாயின், எவ்விடத்தில் மூப்பு, பிணி, மரணமில்லையோ, அவ்விடத்தில் போய் ஒன்றவேண்டும், அங்கு நீ என்னும் எண்ணத்தை அறவே ஒழித்து, அவன் என்னும் எண்ணத்தோடு கலக்கவேண்டும். அப்போதே நீ மரண தூத னைக்கண்டு நகையாடலாம்.

ஓம். தத். சத்.

13. துன்ப வார்த்தை.

——(o)——

மனமே! உன்னை ஒருவன் சில வார்த்தைகளால் திட்டின காலத்து, நின் நிலையை மறந்து என் உடம்பெல்லாம் அனலால் தகிக்கப் பட்டவன் போன்று மயங்கி அறிவிழக்கின்றாய். அப்போது உன்னையறியாமலே உன் இரத்தம் கொதிப்பெடுத்து உனக்குத் தீங்கு செய்தவனுக்குப் பதில் தீங்கு செய்யவேண்டுமென்று ஆத்திரப்படுகின்றது. இது நிற்கட்டும். ஒருவன் உன்னைச் சில வார்த்தைகளால் தோத்திரஞ் செய்தகாலத்தில், உன்னையறியாமலே, உன்னை மறந்து, உன் உடம்பெல்லாம் பூரிக்கின்றாய். அப்பொழுது உன்னிடத்துள்ள எப்பொருளை அவன் கேட்டாலும் மகிழ்ச்சியோடு கொடுக்க முன்வருகின்றாய். மனமே! உன் செயல் மேற்கண்ட இரண்டிடத்திலும் பிழைபட்டனவே யாம். உன்னை சுடுசொல்லால் துன்புறத்தின காலத்தும், உன்னை தோத்தரித்த காலத்தும் உன்னிடம் வந்து செயல் செய்தன சிலவார்த்தைகளே யன்றோ? அவ்வார்த்தைகளை, உன்னில்நீயே, சிலவற்றிற்கு துன்பச் சொல்லென்றும், சிலவற்றிற்கு இன்பச் சொல்லென்றும் கற்பித்துக் கொண்டனை. சப்த மாத்திரையான சில சொற்கள், உன் இன்ப துன்பங்களுக்குக்காரணமாய் நிற்குமாகில், உன் அறியாமை எவ்வளவு என்பதை நீயே ஆராயவேண்டாமா? ஒருவன் உன்னை நல்லன் எனினும், பொல்லாதவனெனினும், வார்த்தை மாத்திரமே யன்றிச் செயல் ஒன்றும் நேரக்காணேமே. தீயைத்தொட்ட காலத்து சுடுகின்றது. தண்ணீரைத் தொட்டகாலத்து குளிர்கின்றது. தீ என்ற வார்த்தையும் தண்ணீர் என்றசொல்லும் சுடவுங்காணேமே, குளிர்விக்கவும் காணேமே! அதுபோன்று தீச்சொற்களாகச் சிலவற்றையும், இன்சொற்களாக சிலவற்றையும் சொல் மாத்திரத்தினுனே நீயே கற்பித்துக்கொண்டு கலுழ்கின்றாய். மகிழ்கின்றாய். உண்மை ஞானம் உன்னைவந்து அடைந்து வாழ விரும்புவையானால்,உன்னை நல்லன் எனினும், தீயனெனினும், நரகிடைபுகுத்தினும், வானிடை யிருத்தினும் இரண்டிடத்தும் மகிழ்ச்சியும் வேண்டாது, மயக்கமுங் கொள்ளாது நிற்க வேண்டும். அப்போதுதான் உன்னில் ஓர் நிலையை அடைய ஹேதுவாகும். நீ பாலப்பருவமுதல், சில வார்த்தைகளை உனக்கு இன்பம் பயப்பனவாகவும், சிலவார்த்தைகளை துன்பம் பயப்பனவாகவும், கொள்கை கொண்டனை. அதன் தடித்த விசேடமே, உன்னை இவ்வளவு தூரம் அலைக்களிக்கிறது. உன் காதாரக்கேட்கும் எவ்வார்த்தைகளையுமே, உனக்கு இன்பம் கொடுப்பனவாகவே கருது. அப்பொழுது எந்தவார்த்தையும் இன்பவார்த்தையேயாம். இன்பம் பயப்பனவான ஒரு சொல்லின் காரண காரியமாயே. நீயும் இவ்வுலகும் தோன்றி நிற்கின்றீர்கள். அச் சொல்லின் தார தம்மி

யத்தை நீ அறிந்து உய்யவேண்டினால், அவ்வின்பச்சொல் எதென நீயே அறியவேண்டும். சொல்லாலும், பொருளாலும், அளவையாலும், காண்டற்கரிய அச்சொல்லை, நீ அறிந்து அநுபவிக்கும் போதே நீயே இன்பசோபிதமா யிருப்பாய். துன்பச் சொற்களெல்லாம் துகள் பட்டோடுமே.

ஓம். சத். சத்.

14 தன் மறுப்பு.

—(o)—

மனமே! உன் தன்னயம் என்னை எவ்வளவு துன்பத்தில் இழுத்துப்போகிறதென்பதைக் கவனி. நீ தன்னந்தனியனாய்ச் சுகம்பெற எண்ணுகின்றாய். அதெற்கென ஓயாது பாடுபடுகின்றாய். நீ எண்ணிக் கொண்டு பாடுபடுவதாயுள்ள சுகங்களெல்லாம், உன்னைப் பூரணமாய் அடையவுங் காண்கின்றாயில்லை. நீ ஒன்று நினைக்க, வருவது வேறொன்றாகிறது. நின் சாமர்த்திய விசேடத்தால், எல்லாச் சுகங்களையும் அடையலாமென்று, கருதுகின்றாய். உன்னை எவை எவை அடையவேண்டுமென்று நியதி பெற்றிருக்கிறதோ, அவைகளையன்றி வேறோர் அணுவுங்கூட உன்னை வந்து அணுகுவதில்லையே. பன்னாள் வருந்தியும், பாடுபட்டுப்பார். பயனொன்றும் உன் சாமர்த்தியத்தினால், உன்னை அடைவதாகாது. எல்லா சமர்த்துக்கும் காரணனான ஒருவனின் தண்ணருள் நின்னிடம் கிஞ்சித்தேனும் கிருபை புரியுமானாலன்றி, நீ ஒன்றையும் செய்து முடிக்கமாட்டாய். இதுவே நின்னை நின் நயத்தினின்றும் காப்பாற்ற வல்லது. அத்தண்ணருளோ! வேண்டுவார்க்கும் வேண்டாதார்க்கும், பொதுவாய் எங்குமாய், ஏகமாய் தண்மழைபொழிகின்றதே. நீ உன்னயம் விட்டு, நன்னயங் கைப்பிடித்து அப்பெருவாருதியில் மூழ்கப்பார். அவ்வாருதியில் நீ நல்லவனென்றாவது, தீயவனென்றாவது உலகத்தார் மதிக்கும் ஏற்றத்தாழ்வு கிடையாது. எப்படி அகண்ட சமுத்திரத்தின்கண், கங்கா ஜலமும் கழிவு நீரோடையும், கலந்து ஒன்றாகிறதோ, அதேபோன்று பேத அபேதமில்லையே. ஆனதால் மனனே! இன்றுமுதல் நீ செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும், உனக்கென ஒருகைமாறும் வேண்டாது, பரப்பிரீதியாக நன்மையையாயினும், தீயதையாயினும் செய்துமுடி. நன்மையையும், தீமையையும் உலகத்தவர், அவரவர் மனப் போக்கின் படியே கணிக்கின்றார்கள். உனக்கு நல்லதிது, தீயதிது வென்று கணித்துப்பார்க்க காலங் குறுகியதாயே இருக்கிறது. அதனால் கலங்கலை! மனனே! அகசர் தம்

குலதர்மமாக துஷ்டநிக்கிரகமும், சிஷ்டபரிபாலனமும் செய்கிறார்கள். துஷ்டர், சிஷ்டர் யாரென்றும் அவர்தம் குறுகிய அறிவினால் கணிக்கின்றாரேயொழிய, உண்மை சிஷ்டனையாவது, துஷ்டனையாவது அவர்காண பூர்ண அறிவில்லதாவரே யாவர். சில போது குற்றம் செய்தான் ஒருவன் இருக்க குற்றமில்லாதவனை நிக்கிரகம் செய்கின்றனர் காலாவதியில் உண்மை தெளிவுபட்டு, தான் அபக்கிரித்யம் செய்துவிட்டோமே என்று வருந்துகின்றனர். அப்போது தான் தன்னால் ஆய்ந்து முடிவுக்கு வருவதாயுள்ள எதுவும், பூர்ண அறிவுள்ளதல்ல வெனக் காண்கின்றனர். உலகிலமைந்த கொடிய நாக விஷமும் ஏதோ ஓர் நன்மையின்பொருட்டே அமைக்கப் பெற்றிருக்குமாயின், நீ உன்னறிவாலும், உணர்ச்சியாலும் தன்னயங் கொண்டு கணித்து கொள்வதானால், உன் அறியாமையை விளக்குவதல்லது, உண்மையைக் கண்டவனில்லையே. ஆனதால் மனனே! உன்னயம் ஒழித்து, பின்னயமும் வேண்டாது, என்னயத்துக்கும் காரணனான ஒருவனோடு ஒன்றி நில், அவன் விட்டபடியே விடட்டும், ஆட்டுவான் கை நின்று ஆடும் பம்பரம் போல் ஆடிக்கொண்டிரு.

ஓம். தத். சத்.

15 மன வாதம்.

மனமே! நான் எத்தனை புத்தி சொன்னாலும், நீ என் வழியில் கிஞ்சித்தேனும் உணர் வில்லாதவனாய், என்னைக் கல்லும் முள்ளும் காடும் நிறைந்த அந்தகாரக காட்டினிடையே இழுத்துச் செல்கின்றனையே. நான் உனக்கு என்ன தீமை செய்தேன்! உன்னைச் சரணென அடைந்த அன்றுமுதல் இன்று வரையும், நீ யாதொரு நன்மையினையும் செய்யக் காணேமே. உன்னைப்பார்க்கிலும் எனக்குற்ற துணைவர் யாரிருக்கிறார்கள். உன்னோடன்றோ என்னைப் பிணைப்படுத்தி யிருக்கிறது. நீயோ! உன்போக்கிலே போகின்றாய். உனக்காகவேனும் ஏதாவது சுகங்கண்டனையா? நீ சுக முற்றால் நானும் சுகமுற்றவனே. நீயோ உன்போக்கிலெல்லாம் சென்று ஒரு முடிவுக்கும் வாராமல் தியங்குகின்றாய். உன்னை அண்டிவந்த நானுங் கலங்குகின்றேன். உனக்கும் எனக்கு முள்ள தொந்தம் எப்போது லபித்தது. அதையாவது சொல்லமாட்டாயா? நீயும் நானும் ஓர் இடத்தினின்று வந்தவர் தாமோ? அல்லது நான்வேறு, நீ வேறுமோ? நீ என்னை இடையில் பற்றினையோ? அல்லது நானே உன்னை பற்றினேனோ? ஒன்றுந்தெரியவில்லையே. ஐயோ! உன்வசம்

என்னை விட்டு நான் படும்பாடுகளைப் பார்த்திருப்பவன் ஒருவனுண்டோ? அவன் மறக் கருணை யுடையவனோ? அறக் கருணையுடையவனோ? அதையாவது எனக்குத் தெரிவி. நீயோ, சில சமயங்களில் நற்குண முடையவன்போல் நடிக்கின்றாய். அப்போதே என்னையும் நல்லவன் ஆக்குவாய் என்று மகிழ்கின்றேன். பிற்பொழுதே தீக்குணமுடையவனாய் என்னையும் உன்வழியில் இழுக்கின்றாய். நற்குணமும் தீயகுணமு முடைய உன் சிநேகமன்றோ என்னையும் அலக்கழிக்கின்றது. மனமே! நீ நல்லன் என்றே எண்ணுகின்றேன். நீ கற்பிக்கும் கற்பனைகளையும், நீ சிருஷ்டிக்கும் சிருஷ்டிகளையும் நோக்குமிடத்து, நீ எல்லாம் வல்ல ஒருவனிடத்து நின்று தோன்றயிருக்க வேண்டும். அவ்வல்லான் வகுத்தபடியே நீயும் நானும் ஒருமைப்பட்டோம். அவ்வல்லான் உனக்கு தன்னுண்மையைப் போதித் திருக்கக் கூடும். அவ் வுண்மையை எனக்குக் கற்பிக்கவே நீ எனக்குத் துணை வந்தாய். உண்மையை மறைக்கப்பார்த்து என்னைச் சோதிக் கின்றனையா? உன் சோதனைக்கு நான் ஈடாவேனா? நான் கலங்கும் கலக்கத்தினைக் கண்டு கை கொட்டி நகைக்கின்றனையே! இது உனக்குத் தர்மமா? என்னில் நீ கிருபை கூர்ந்து, நீ அறிந்த தாயுள்ள உண்மையினை எனக்குக் கற்பிக்கவேண்டும். நீயும் என்போல் உண்மையை அறியாமல் திகைப்பையானால், என் போக்கிலாவது என்னை விட்டுவிடவேண்டும். என்னையும் உன்னையும் பிணைப்படுத்தினவன், உன்னைப்போல் அவ்வளவு மறக்கருணை யுடையவனல்லன என்று எனக்குள் ஏதோ உனக்கன்னியமான ஒருவஸ்து சொல்லுகின்றதே! அதன்படி கேட்டு நடக்கப்போகின்றேன். கருநாள்த்தொடங்கி இது நாள்வரையும் தொடர்ந்து வந்த உன்னையும் கைப்பிடியாய் என்னோடு அழைத்துச் செல்லப் போகின்றேன். உனக்கு அப்படி வர சம்மதியா? சம்மதியாயின், நீயும் நானும் சுகமடைவோம். விரைக மனனே! விரைக! காலம் கடுகியது.

ஓம் தத் சத்.

16. கனு அரசு.

——(o)——

நான் ஒரு நாள் கனவுகண்டெழுந் திருந்தேன். அக்கனவில் நான் கண்டதாயுள்ள பொருட்களும், நான் அனுபவித்த சுகங்களும் கணக்கி லடங்காதன. நான் ஒரு தேசத்துக்கு அரசனாய் ரத்ன சிங்காசனத்தில் வீற்றிருக்கவும், பல யௌவன மாதர் சாமரம் வீசவும், அரம்பையர் ஒத்த அழகு வாய்ந்த

பெண்கள் சோபனம் பாடவும், நில வொளியையும் பொன்னொளியையும் பின்னடையச்செய்யும் ஒரு மாது என் அருகிருந்து உபசாரணை செய்யவும், என்னறிவில் மிக்கார் சிலர், என் ஆணையைச் சிரமேற்றாங்கி ததாஸ்துச் சொல்லவும், என் சேனா சமுத்திரத்தின் எல்லையை என் தோற்ற அளவில் கணிக்கமுடியாதபடி, ஒருபகுதியையே நான்பார்த்து மகிழவும்; என் நாட்டுக் குடிகள், எங்கள் அரசு வாழ்க! எம்பிரான் வாழ்க! என்று ஆசி கூறவும் கண்டேன். அரங்கம் விட்டு வெளிவந்த போதும் என்னைத்தாங்குவார் கோடியும், என் வாக்கினின்று வரும் ஒவ்வோர் வார்த்தையினையும், வேத வாக்காக மகிழ்வார் கோடியும், நான் எதை எதைவிரும்பி வெளியிடுகின்றேனோ அதனை அப்பப்போது செய்துமுடிப்பார் கோடானு கோடியுமாக, யாதொரு குறைவு மில்லாமல், என்னில் நானே மகிழ்ந்து பூரித்து நின்றேன். என்வாக்குக்கு எதிர்மாறு சொல்வார் எவர் எனக்கர்வித்தேன். என்னில் மிக்க ஒரு பொருளும் உண்டோ என்று ஐயுற்றேன். ஐயோ! இதென்ன, இடியோசை போன்ற பேரொலி நகரமெங்குங் கேட்கிறதே! இச் சப்தத்தின் காரணம் ஏதென, என்னருகில் நின்ற மந்திரத்தலைவனை உசாவினேன். அவன் முகமவாட்டமுற்றத. மௌனங் கொண்டான். பின் பலரையும் வினவ, ஒருவரும் சரியானபதில் சொன்னாரில்லை. ஆயினும் பனமுறையும் அவர்களை இரந்து வேண்ட. அவர்களில் ஒருவன், அரசே! நமக்குக கெடுகாலம் வந்துவிட்டது என்று வாய்குளற மெய் நடுக்குறச் சொன்னான். நம நாட்டுக்கு அணித்தாயுள்ள பேராகன் என்னும் அரசக்கள்வன் நமமேல் படை எடுத்தள்ளான். கொள்ளை கொள்ள வருகின்றான் என்றான். நான் ஜனங்களைப் பார்த்து நகைத்துக்கொண்டு, என்னே! நமது சேனையின்வலி அவன் அறியானோ? நமது பராக்கிரமம் தெரியானோ? அவனை க்ஷணப் பொழுதில் தொலைத்துவருக வென்று ஆங்காரமாய் பதிலுரைத்தேன். மந்திரத்தலைவர், கடந்த நாலு நாளாய் எங்களால் இயன்றவரை போர் செய்தோம், நமது பட்சம் ஜெயமில்லை. அவனே நம் நாற்படையையும் ஜெயமபெற்றான், அரண்மனை வாயிலில்வந்து உங்களை கைதியாக்கி கட்டிக் கொண்டு போகக் குமுறு கின்றான்: என செய்வோம். உங்கள் சரண் தான், எங்கள் தஞ்ச மென்றார்கள். இதற்குள் பேராகன் நானிற்குமிடம் வந்து என்னிரு கைகளிலும் பொன் விலங்கிட்டுப் பிணித்தான். அப்போதுதான் உண்மை எனக்கு வெளிப்பட்டு, கருணாகரா! ஆபத்பாந்தவா! அடியேனை காக்கவா, பரந்தாமா! என்று வாய்குளறி அலறி, என்னிரு கைகளையும் உதறி, முன்னிற்பவர்களையும் தள்ளிவிட்டு ஓட ஆரம்பித்தேன். ஐயோ! அப்

போதுதான் என் நிலை எனக்குத் தென்பட்டது. என்மனம்பட்ட பாடு யாரே அறிவார். என் கண்ணின் நின்று கரைகாணாத வெள்ளம் போல கண்ணீர் வெளிப்பட்டது. என் அங்கமெல்லாம் வியர்த்துச் சில்லிட்டது. எங்குபோவது, எவர் சரணடைவது என்று உன்னித்திடுக்கிட்டு கண்விழித்தேன். என்ன பிரேமை! என்ன கனவு! நான் அரசனுமல்லன், ஆண்டியு மல்லன். பழைய பிரபோதனே படுக்கையி லிருக்கின்றேன்.

ஓம். தத். சத்.

17 உண்மைச் சன்னியாசம்.

——(o)——

மனமே! நீ சிலசமயங்களில் சன்னியாசம் வாங்கிக் கொண்டு, உன் உற்றார் பெற்றார் பெண்டு பிள்ளைகள், இவர்களை விட்டு தனியனாய், காஷாயதாரியாய், கமண்டலமுங் கையுமாய் திரிய அவாவுகின்றாய். ஆம்! நீ சன்னியாசம் பெற எண்ணினது எவ்வளவோ நன்மையை அடையலா மென்ற ஒரு எண்ண மாத்திரத்தினாலேயன்றோ. உனக்கு உன் குடும்ப விவகாரங்களில் வரும் இன்ப துன்பங்களை, ஓரே நிலையில் வைத்து நோக்கும் உள்நோக்கு ஒன்றில்லாமையால், துன்பங்கள் நேர்ந்தகாலத்துத் துன்பம் ஒழிந்து சுகம்பெறுவதற்குச் சன்னியாசம் ஒன்றுதான் நல்லவழி என்று, அதன் வழியைப்பற்ற நினைக்கின்றாய். அப்படி நீ சந்நியாசம் பெற்று செய்யுங் காரியமென்ன? பெண்டு பிள்ளை உற்றார் முதலியோருக்காகத் தினம்பாடு பட்டு உழைக்க வேண்டிய நிமித்தங்கள் உன்னை விட்டு அகல்கின்றது. குடும்ப விவகாரங்களில் வரும் கஷ்டங்களை உன்னதாக்க மனமில்லையோ? குடும்பத்தில் வரும் சுகங்களை உன்னுடையதாக்க வேண்டுமோ? இது தானே! நீ உன்னைக்காப்பாற்றிக் கொள்வதற்கான உணவு உடை முதலியவைகளை, பிறரிடத்தில்யாசித்துப் பெற்றுக்கொள்ளலாம் என்ற மூடப்பிடிவாதமல்லவா உன்னைச்சந்நியாசத்தின் வழிபற்றி இழுக்கிறது. இல்லை! இல்லை! உணவிற்கும் உடைக்குங்கூட பிறரிடம் யாசிப்பதில்லை என்பாயோ! பின் எவ்விதந்தான் ஜீவித்திருக்க எண்ணினாய். "பேய்போற்றிரிந்து பிணம்போற் கிடந்து, இட்ட பிச்சையெல்லாம் நாய்போலருந்தி, நரிபோலுழன்று திரிவேன்" என்பதுன் எண்ணமாயின், சபாஷ்! நீ அவ்வளவு தீவிர புத்தியுடையவனா? அதை எளிதில் அடைய் சாத்திய முற்றவனா என்பதைக் கவனித்தனையா? அப்படியாயின், உன் குடும்ப விவகாரங்களில் வருந் துன்பங்களிலும் பேய் போற்றிரிந்து, பிணம் போற்கிடக்கப் பழகாததென்னே? நீ உன்னை த்தலைவனாகக் கருதி

க்கொண்டு, நாமே யாவுஞ் செய்கின்றோம்; நாமில்லாது போனால் நமது குடும்பம் பிழைப்ப தேது, என்று உன்னிலையை நீ பெரிதாய் எண்ணி, இக் கவலைகளெல்லாம் நமக்கெற்றுக்கு? என்ற தற்பெருமையாலன்றோ சந்நியாசத்தில் ஆசை வைக்கின்றாய். இத் தன்னயம் உன்னிடம் நிலைகொள்ளும் வரையும் நீ, சந்நியாசத்தின் உண்மையைக் கண்டவனல்லவே! நீ, முன்னிற்கப் பழகுவதாக எண்ணித் துறவு கொள்ளக்கிடந்த பேய்த்தன்மையும், பிணத்தன்மையும், நாய்த்தன்மையும், நரித்தன்மையுமல்லாமல், பின் அனுட்டிக்கச் சொல்லியிருக்கும், தாய்தன்மையும், தமர்தன்மையும், தாழ்மைத் தனமையும், சேய்த் தன்மையுமன்றோ உன்னைப் பூரண சந்நியாசியாக்கக் கூடியது. அவையன்றோ உண்மைச் சந்நியாசத்தின் நிலைத்த பேறாகும். நீ காடு மலை வனாந்தரங்களில் திரிந்து, கந்தை சுற்றிக்கொண்டு கையுணவேற்றுக் காலங் கழிப்பனேயாயினும், அக்காடுங் கந்தையும் உணவுமே, காலாகாலத்தில் துன்பமா யன்றோ காண்பாய். மனனே! நீ ஒன்றை விட்டு ஒன்று பற்றுதல் என்னும் சேஷ்டா முகூர்த்தமாய் விளங்கும் அறிவிலியானாய். உண்மைத் துறவு நீ அடைய விரும்பினால், நீ நின்ற இடத்தே வருவதை, வந்தபடி மகிழ்சியோடு அநுபவித்துத் தேறுதல் வேண்டுமே.

ஓம். தத். சத்.

18 முயற்சியின் லாபம்.

—(o)—

மனமே! நீ உன் முயற்சியில் லாபம் பெற்று மேலும் மேலும் பிரவிர்த்தியடைய எண்ணுகின்றாய். பொருளாகவாவது, போகமாகவாவது உனக்கு எது எது கிட்டுகின்றதோ, அதைச் சந்தோஷமாய் அனுபவிக்கின்றாய். நீ எண்ணிய லாபகரமான பொருள் உன்னைச் சிலசமயங்களில் அடைய வில்லையானால் அதன் காரணம் இன்னதென அறிய அங்கலாய்க்கின்றாய். நீ எண்ணுகிற எல்லாச் சுகங்களையும் அடைய வேண்டுமானால், உலகத்திற் காணும் எல்லாப் பொருட்களும் உன் காலடியில் காத்திருக்கவும் வேண்டுமே. அப்போதாவது நீ திருப்தி யடைவாய் என்பது எனக்குத் தோன்றவில்லையே. கிடைத்த ஒரு பொருளில் என்று உனக்குத் திருப்தி வருகிறதோ, அன்றே எல்லாப் பொருட்களும் உன்னுடையதாகும். நீ ஆசைப்படுவதாயுள்ள எப்பொருளும் உன்னை அடைந்து கொண்டே யிருக்குமானால், நீ உன் நிலையை மறந்து, அப் பொருள் நிலையிலே மூழ்கிப்போவாய் என்ற ஓர் கருணையினாலேயே, எல்லாத் தோற்ற பொ

ருட்களுக்கும் காரணமான பரமபிதா, சில சமயங்களில் உன க்குச் சிலபொருட்களை உதவுவதில்லை. அவர் பூரண அறிவும், உன்னை உத்கிருஷ்டனுக்கக் கூடிய வல்லமையும் உடையவரான தினுலே, அவர் உனக்கு எது எது வேண்டியதோ அதைக் கொடுக்கின்றார். இதனை மறந்து உன் முயற்சியினுலே, ஆசையி னுலே, அங்கலாய்ப்பினுலே எப் பொருளையும் விரும்புவையாளுல் அப்போதுதான், உன் முயற்சியின் இழிந்த தன்மை இன்னதென அறிவுறுத்துகின்றார். அப்படி அறிவுறுத்துவது உன்மேலுள்ள கருணையினுலே யன்றி வெறுப்பினுலல்ல வென்பதை உணர்ந்து கொள். உன் கண்ணிற்கு அலங்காரமான எப்பொருளும் உன க்குக் சுகங் கொடுப்பனவென்று கருதாதே. நீ அகண்ட ஐஸ் வரியவானுய் எல்லாச் சுகபோகங்களையும் அநுபவிக்கிற நிலை யிலிருந்தாலும், உனக்கென உன் அந்தரங்கத்தில் சில போக பாக்கியங்கள் கிட்டவில்லையே என மருண்டு கொண்டுதானி ருப்பாய். இதுதான் கருணையின் நியதி. எவனுவது தன்னை மற ந்து பிற பொருட்களில் சிக்கி மூழ்கிப் போவானுனல், அவன் நிலை என்னும்? உன் சுகத்திக்காகத்தானே பொருளையும் போக த்தையும் விரும்பினுய், உன்னையே விழுங்கி உன்னையே மறை ப்பதான பொருள் வழியும், போக வழியும் எவ்வளவு துன்ப மென்பதைக் கவனித்தனையா? உன் தன்னிலையை நீ மறக்கப் பார்க்கின்றுய். அது நல்லதே. நீ பிடித்துச் சுகம் பெற எண் ணிய உலகப் பொருள் உன்னைப்போல் அவ்வளவு சாசுவதப் பொருளல்லவே. நீ தினமும் பாடுபட்டு உலகப் பொருட்களை உன்னதாக்க எண்ணும் வரையும், உனக்குச் சுகமென்பது சிறிது மிராது. ஆயின், உன்னையும் உலகப் பொருட்களையும் தன் இச் சா மாத்திரத்தினுலே கருணை கொண்டு கற்பித்தவனுன பரம் பொருள் ஒன்றுண்டு. அப்பொருளை அடைய சதா முயற்சி செய். அப்பெரும்பரம்பொருளே, உன்னையும் என்னையும், உன் னைச் சுற்றிய சகல பொருட்களையும், விழுங்கிக் கொண்டிருக் கிறது. அப்பொருளோடு ஒன்றி நில். அப்போதே நின் முய ற்சியில் லாபமுண்டு.

ஓம். தத். சத்.

(o)

19. தன்னந் தனியன்.

(o)

நான் ஒருநாள் என்பால்ய நண்பனைப் பார்க்க அவாவுற்றேன். அவனிருக்குமிடம் நானிருக்கு மிடத்திலிருந்து 5 மைல் தூரத்தி லிருந்தது. வழியோ! காடும் மேடும் கற்களும், பலநெருங்கிய

தோப்புகளும், இடுகாடும் சுடுகாடுமா யிருந்தது. என்னால் அவனைப் பார்க்க வியலுமோ? என்ற அச்சம் மிகுந்திருந்தாலும் நண்பன் மேலுள்ள பிரீதியால், அவனிருக்கு மிடத்திற்கு எப்படியோ போய்ச் சேர்ந்துவிட்டேன். அவனோடு அளவளாவிப் பேசிக்கொண்டிருந்ததில் பொழுதுபோனதுந் தெரியவில்லை. என்னிருப்பிடத்திற்கு திரும்பவேண்டுமென்று எண்ணிப்புறப்பட்டேன். வெளிச்சங் கொஞ்சக்கொஞ்சமாய் மறைய ஆரம்பித்தது. நான் தன்னந் தனியனாய் அக்காட்டினிடத்தே வர எனக்கு அச்சமேலிட்டது. சுடுகாட்டிலோ பிணம் வைத்து வெந்து கொண்டிருந்தது. தூரத்திலுள்ள தோப்பினின்று ஏதோ பயங்கரமான ஊளைத்தொனி ஒன்றும் என்காதிற் கெட்டிற்று. என்செய்வேன்! நண்பனோடாவது இன்றிரவு தங்கினோமில்லையே! அவன் சாநித்யம் எவ்வளவு குதூகலமாயிருந்தது; என்று எண்ணிக் கொண்டே, என்னைப் பூரணமாய் மறந்து திடுக்கிட்டு, ஒன்றுந் தோற்றாது பதைபதைத்து, என்னிரு கண்களையும் மூடிக்கொண்டேன். என்னிருகாதுகளையுந் தொனி கேளாதபடி இருகைகளால் பொத்திக்கொண்டேன். என் வாயோ பூட்டிட்டது போன்று மூடிக் கொண்டது. என் மனம் மாத்திரம் சஞ்சலப் பட்டபோதிலும், வீடு போய்ச் சேரவேண்டு மென்ற ஒரே ஒரு நோக்கத்தில் நிலைத்துக் கொண்டிருந்தது. என் கால்களோ முன்னுக்குப் போகிறதோ, பின்னுக்குப் போகிறதோ என்று என்னால் சொல்ல இயலவில்லை. அப்படி என்னை அறியாமலே வந்து கொண்டிருக்கும் போதே; மூடியிருக்கும் என் கண்களுக்கிடையே ஒரு பிரகாசமும், சிலர் பேசுந் தொனியுங் கேட்டது. அந்தோ! பேயோ பூதங்களோ! பேசுகின்றனவாக்கும், நாம் இன்றோடே கெட்டோம். நம் உயிர் தொலைந்தது என்று எண்ணி, மறுபடியும் இறுக்கமாகக் கண்களையுங் காதுகளையும் வாயையும், கட்டிக்கொண்டேன். அச்சமயத்தில் என்மேல் யாரோ கைவைத்துத் தொட்டதாகவும் உணர்ந்தேன். கை என்மேல் படவும் திடுக்கிட்டுக் கண் விழித்தேன். என்னே! நான் தேடிப் போயிருந்த என் பால்ய நண்பனே, அவ்விருட்டில் என்முன் நிற்சகண்டேன். அவன் தானோ என்ற ஐயம் சிறிது நீங்கவும், நான் அவனைக் கட்டிக் கொண்டு, நண்ப! நீ என்னைத் தனியே விட்லாமா! என்று ஓவெனக் கதறினேன். அவன் பிரபோத! நீ தனியாய் நின்னிருப்பிடம் செல்ல எண்ணிய போதே, உன்தைர்யம் எவ்வளவெனப் பார்க்கவே நான் சும்மாவிருந்தேன். ஆனாலும் உன்னைத் தனியனாய் விட்டுவிட்டால் வழியில் நேரும் காட்டையும் மேட்டையுங் கண்டு, நீ என்ன செய்கின்றாய் பார்ப்போ மென்றே, உன் பின்னாலேயே நானும்

வந்துகொண்டிருந்தேன். நீயோ வெகு விரைவாய் முதலில் சென்றவன் பின் தயங்கினாய். என் வீட்டை விட்டு வெகு தூரம் சென்றாயில்லை. ஒரு மைல் தூரமே கடந்து வந்திருக்கிறாய். உன்னை நான் கைவிடுவேனோ! உன்னைப்பார்க்கிலும், எனக்குற்ற நண்பன் வேறெவன். நீ பயப்படாதே? என்னோடேயே என்வீட்டுக்குச் செல்வோம் வா, என்று கையை பிடித்து வழி கூட்டிப்போனான்: என்னே! அவனன்பு.

ஓம். சத். சத்.

(o)

20. நிலைத்த பேறு

(o)

மனமே! நீ யாதொரு துன்பமுமில்லாது, சுகம் அடைந்து வாழ விரும்புகின்றனையா? இதுவரை நீ சுகமெனக் கொண்ட எப் பொருளும் உனக்குச் சுகம்கொடுக்கவில்லையோ? அப்படியாயின் சுகவடிவாம் ஒரு பொருள் உண்டென்று கருதுகின்றனையா? அன்றி இல்லை என்கின்றனையா? இல்லையாயின் உன்னை யறியாமலே சுகம் வேண்டுமென்று அவாவுவானேன். இதனால் நீ அடையவேண்டியதாயுள்ள நிலைத்த பேறு ஒன்றுண்டென்று காண்கின்றாயன்றோ. அந்நிலைத்த பேறு எதாம் என்று என்றேனும் ஆராய்ந்தனையா? உலகத்தில் வாழும் ஒவ்வொரு ஜெந்துவும் தனக்கோர் துன்பம் நேர்ந்தகாலத்து வெகுவாய்க் கலங்கித் துன்பம் ஒழிந்த ஓர் இடத்தில் ஒன்ற வேண்டுமென்று அவாவுகின்றதே! எவ்விடத்தில் துன்பமென்பது சிறிதுமில்லையோ, அங்கு சுகம் பிராப்தமாயிருக்குமென்பது திண்ணம். அவ்விடம் எங்கிருக்கிறது, அதற்கு செல்ல வழிகளென்ன? என்பதுதான் நீ உணரவேண்டிய முக்கிய விஷயம். முதலில் துன்பத்தில் உழன்று கொண்டிருக்கின்ற நீ, எவ்விடத்தினின்று இங்கு வந்தாயோ! எவ்வழிபிடித்து இங்குவந்தனையோ, அவைகளை எனக்குத் தெரிவி. அவ்விடமும், அவ்வழியுமே உன்னை நிலைத்த சுகப்பேற்றில் வைக்கத் தகுந்தது. நீ இவ்வுலகப் பேற்றை விரும்பி உன்னிலையினின்று நழுவினாய். உன்னைப் போன்று தன்னிலையில் நின்று நழுவிய மற்றவரோடு உறவுகொண்டாய் உறவினாலே உனக்கும் தீங்கு பிராப்தமாயிற்று. எழுவகை யோனிபேதங்கடோறும் புகுந்து வெளிப்பட்டாய், வெளிப்பட்டும் உன்னிலையிலாவது நின்றனையா. மேலும், மேலும் தோற்றப் பொருட்களான உன்போன்ற யோனிவாய்ப்பட்ட பல பொருட்களோடும் உறவினாய். எல்லாருமாகச் சேர்ந்து கும்மாளம் போடுகின்றீர்கள். தோன்றும் பொருட்களுக்கு ஆதிகாரணமாயுள்ள உ

R N22
172459 Chennai-600 008.

பஞ்சபூதங்களேயாம். பஞ்சபூத ஒன்றுபட்ட மிசிர அமிசிர சேர்க்கையால், உலகங்களும் உலகப் பொருட்களும் சேர்ந்து இயங்குகின்றன. இப் பஞ்சபூதங்களைச் சர்வையில் சேர்ப்பானொருவன் பஞ்சபூதங்களுக்கு அன்னியனாயே இருக்கவேண்டும். அப்பஞ்சபூதங்களில் அதிபூதமான ஆகாயம், அவன் உருவை முதலில்பெற்ற தன்னில் செயல் மிகுந்து, பிறபூதங்களை சிருஷ்டித்திருக்கவேண்டும். காரணனான ஒருவன் தனியனாயிருக்க அவனைச் சுற்றியுள்ள அதிபூதமானது விஸ்ரிமபித்த அவன் இன்னருள் கொண்டு, பல்வேறு ரூப பேதங்களாய் பரிணமித்தன. அதி பூதமான ஆகாயமும் சடமேயாயின், அச்சடமும் அப்பரம புருஷனின்று வேறாமோ? என ஐயுறுகின்றாய். ஆம், அதிபூதச்சடமும் அவனில் நின்று வேறல்லதான். எனினும் எப்படி அக்கினியானது தன்னில் சோதியையும், சூட்டையுங் கொண்டிருக்கின்றதோ, அதே போனறு அப்பெரியன் விளக்கமான பிரகாசனாயினும், சூட்டையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்றான். அச்சூட்டின் விஷேடமாயே பஞ்சபூதங்கள் செயல் பெற்றன. செயலில் அவனும் குப்தமாய் ஒன்றுபட்டான். ஒன்றுபட்டும், அவன் தனியனே. அச் சோதிப் பிரகாசனிருப்பிடமே நின்னிடம். அவனினின்று தூர ஓடிய நீ, வந்த வழிபிடித்து அருகில் செல். அப்போதே அச்சோதியோடொன்றுவாய். அதுவே உன்னிலைத்த பேறும்.

ஓம். தத். சத்.

21 சத்சித் ஆனந்தம்.

——( )——

மனமே! நீ உன் அறிவினால் கணித்துக் கணித்துப் பார்த்துச் சில பொருட்களைச் சத்துப்பொருளாய் கருதுகின்றனை. அசத்தாகிய இவ்வுலகத்தில் எப்பொருளையும் சத்தாகக் கொள்ள முடியாதென்பதை நீ உணர்ந்தாயில்லை. சத்துப்பொருளானது, நீ நினைத்தபடி உன் அறிவாகும் திராசில்வைத்து நிறுத்து இத்தனை பலம் என்று கணிக்கக் கூடியதா? அப்படி இத்தனை பலம் என்று கைவரக்கண்டனையானாலும், அதற்கு மேற்பட்ட இடை அதனிடம் இல்லை எனவும் கண்டனையோ? நின் தீர்மானம் எத்தனை நாள் நிலைக்கும் தன்மையன என்பதை யோசி. நீ முன் சத்துப்பொருளாய். கருதியிருந்தவைகளெல்லாம் உன் அறிவு மிகுக்க மிகுக்க அசத்தாயன்றோ காண்கின்றனை. பாலப்பருவத்தில் ஆங்குமிங்கும் ஓடியாடித் திரிவதே உனக்கு சத்தாய் தோன்றினது. வாலிப காலத்தில் நல்ல யௌவன மாதர் சுகமே

உண் சத்துப்பொருளாய் தேடி நாடி நின்றனை. பின் பெண் மக்கள் சுற்றத்தார் இவர்களையே சத்தாகக் கருதினாய். வயோதிககாலத்தில் நீ ஆசைவைத்துச் சத்தெனக்கொண்ட எல்லாப் பொருட்களுமே அசத்தாக வன்றோ காண்கின்றாய். அதனால் நின் அறிவின் கணித முடிவு சத்துப்பொருளல்ல, இவ்வுலகமும் மற்றும் எண்ணிறந்த அண்ட பிண்ட, உலகங்களும், அவ்வுலகில் தோன்றி நின்று செயல்செய்யும் ஜீவர்களும், இனித்தோன்றக் கிடக்கும் ஜீவவர்க்கங்களும், எந்த சத்துப்பொருளை ஆதாரமாகக் கொண்டு ஜனித்ததோ! எந்த சத்துப்பொருளானது தோன்றும் பொருட்களுள்ளெல்லாம் நினறு நிலவி நசித்து மாறி மாறித் தோன்றவும, நடக்கவும், மாயவுஞ் செய்து கொண்டு, இத்தோற்ற கிரியைகளில் ஈடுபட்டும், படாமலும் பிரளயாந்தகாலத்தில் தன்னுள் எல்லாச் செயலை அடக்கியும், பின் தான் விரும்பியபடியே தோற்றச் செய்து மிருக்கிறதோ, அது ஒன்றே சத்துப்பொருள் அப்பொருள்; தோற்றம், ஸ்திதி, சங்காரமாகிய முத்தொழிலையுஞ் செய்யுங்காலத்தில் தன் சித்தை (கிரியையை) வெளிக்கு விஸ்ரிம்பிக்கச் செய்கிறது, அச் செயலே சித்தாகும். எப்படி சூத்திரதாரி திரை மறைவில் நின்று பாவைகளை ஆட்டி, அவைகளின் செயல்களை உலகிற்கு காட்டு கின்றானோ! அதுபோன்று மாயை என்னும் திரையில் ஜீவகோடிகளை ஆட்டுவித்து சித்துச் செய்கின்றான். அப்போதுதான் அவன் ஆதிகாரண சத்துவாயும், சித்துவாயும் திகழ்கின்றான். சத்துப்பொருளான அவன் சித்து செய்து கொண்டிருந்தான், இருக்கின்றான், இருப்பான் என்றாலும், அச் சத்துக்கும் சித்துக்கும் அன்னியனாய், சாக்ஷி மாத்திரமாய் நின்று தன்னுள் தானேயாய் ஆனந்த நடனஞ் செய்கின்றான். அவ்வானந்த மயனே எங்கும் நிறைந்திருந்தாலும் ஏகனும். மனமே! நீ அச்சத்சித் ஆனந்தனை அடையவேண்டுமானால் இன்றேவிரைக. நன்றேயாகுக.

ஓம். தத் சத்.

22 நாடக அரங்கம்.

——(o)——

நான் சிறுவனா யிருந்தபொழுது ஒரு நாள் வேடிக்கையாக நாடகம் பார்க்கச் சென்றேன். அன்று அரிச்சந்திர மயானகாண்டம் நடிக்கப்பட்டது. அங்கு பெண் வேசதாரியாய் நடித்த ஒருவன் கதைக்குப் பொருத்தமாக சந்திரமதி லோகிதாஸனை மடியில்வைத்துக் காட்டில் புலம்பி அழும் துயரத்தை ஒப்பாரிவைக்க ஆரம்பித்தான். கதையின் போக்கை யூன்றிக்

கவனித்துக்கொண்டிருந்த எனக்கு, சந்திரமதி தன் ஒரே மகனை காட்டில் பாம்புகடிக்கும் கதிக்கு விட்டு வருந்துவதையும், அவள் அரசனின் பத்தினியாயிருந்தும் பணிப்பெண்ணாய் வருந்திய வருத்தத்தினையும், ஒருங்குசேர என்மனதில் என்னை அறியாமலே கற்பித்துக்கொண்டு, உண்மை சந்திரமதியே இவ்வளவு துயரமும் படுகின்றாளாக்கும். ஐயோ! அவளுக்குத் துணை செய்வார் ஒருவரு மில்லையா? என்ற எண்ணத்தால் கண்ணீருகுத்துக்கலங்கினேன. நான்மாத்திரமன்று, என் அருகிலிருந்த என் நண்பனும் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். நாங்களிருவரும் அழுவதைப்பார்த்து அங்கு வந்திருந்த ஒருவன் சிரித்தான். அவன் சிரித்ததை நோக்கி, பாவி இரக்க மில்லாதவன் இவனைப்போல் கல்நெஞ்சனு முண்டோ! என்று எங்கள்மனம் அவனைத் தூஷித்தது. பின் கதையின் பிற்போக்கில் சந்திரமதி மகனுக்கு காஷ்டமடுக்கி நெருப்புக்கொழுத்தியதும், அரிச்சந்திரன் தோட்டியாய் நின்று, சந்திரமதியோடு வாதாடியதையும் கண்டகாலத்து, உண்மைக் குறைவிடமான அரிச்சந்திரத் தோட்டியின் கல்நெஞ்சமும், என்னை மேலும் மேலும் துன்புறுத்தினது. அவன் தன் எஜமானான வீரபாகுச் சாம்பானின் ஆணைப்படி நடக்கவேண்டியவன், என்ற எண்ணம் கிஞ்சித்தேனும் எனக்குத் தோன்றவில்லை. பின் சந்திரமதி காசி அரசனிடம் கொலைக் குற்றத்திற்காக விசாரணை செய்யப்படும் போதும், எனக்குவந்த அநுதாபத்துக்குக் கங்குகரையில்லை. சந்திரமதியை அரிச்சந்திரனே வெட்டும்படியாய், தறிகட்டையின்மேல் அவள் கழுத்தைவைத்து ஓங்கின வாளோடு அரிச்சந்திரன் நிற்கும் நிலையில், என் மனம் துடித்த துடிப்பு இன்னவெனச் சொலலமுடியாது. கண்ணீர் ஆறாய்ப் பெருக்கினேன். கடவுளர்க்குக் கண்ணில்லையா என்றேன். உண்மையின் பலனிதுவோ எனக் கலங்கினேன். வெட்டு சந்திரமதியின் கழுத்தில்விழவும், பூ பாலையாக மாறவும், தேவ வேஷமிட்டோர் அரசனுக்கும் அரசிக்கும் லோகிதாசனுக்கும, ஆசி கூறவும் கண்டபொழுதுதான், நான் என் அங்கலாய்ப்பிலிருந்து தெளிந்து சிரித்துக் கொண்டேன். என் பக்கமிருந்து நகையாடினவரும் தம்பி! இது நாடகந்தானே என்றார். ஓகோ! நாடகமோ, "நாம் உண்மை இன்னதென அறிந்திருந்தும், பொய் வேஷத்திற்கும் பொய் நடிப்புக்கு மன்றோ கலங்கிவிட்டோம்" என்று எனக்குள்ளேயே நாணிக்கொண்டேன். நடிப்பார் நடித்தால், நாமும் நடிக்கவேண்டுமோ.

ஓம். தத். சத்.

23. தன்முயற்சி

—(o)—

மனமே! நீ சில சமயங்களில் எனக்கென ஒரு செயலும் வேண்டுவனிலன், எனக்கு எது வேண்டுமோ அதை எவன் ஒருவன் என்னைப் பிறப்பித்தானோ அவன் பார்த்துக் கொள்வான் என்று, அவனிடம் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தஞ் செய்கின்றாய். நீ உண்மையைக்கண்டே இது செய்தனை. உன்னை வாழ்விக்க வேண்டியவனும் தாழ்விக்க வேண்டியவனும் அவனேயாம். எனினும், நீ உன்னை வேறாகவும் அவனை வேறாகவும் பேதங்காண்கின்றாய். நீ என்ற ஒருபொருள் உள்ளவரையும் அவனை உண்மையாகக்கண்டாயில்லை. நீ வேறு அவன் வேறுமல்லவே! நீ சிற்றறிவும் சிறு தொழிலுமுடையனாயிருக்க அவன் பேரறிவும் பெருந்தொழிலு முடைய வனாய்காண்பதலாலன்றோ, அவனை நின்னில் பாகுபடுத்திக் கண்டாய். உன் சிற்றறிவும் சிறு தொழிலும் எப்பேரறிவிலிருந்தும் பெருந்தொழிலிருந்தும் தோன்றினதென்பதைக் கவனித்தனையா? உனக்கெனத் தனி அறிவும் தனித்தொழிலு முண்டா? அங்கனமாயின். தனி அறிவுடைமையும் தனிச் செயலுடைமையும் நின்னதேயாம். அன்றிப் பேரறிவினின்றும் பெருந் தொழிலின்றும் பிறந்திருக்குமாயின், நினக்கென ஓர் அறிவும் ஓர் தொழிலும் வேறு பிறப்பதற்கு காரண மில்லையே. எல்லா அறிவிற்கும் செயற்கும் காரணமான ஒருவனினின்றே நீ தோன்றினாய். அவன் எது செய்ய வல்லானோ அவையாவும் நீயும் செய்ய வல்லாய். ஆனால் நீ யிருக்குமிடம் அவனை விட்டு வெகு தூரத்திலிருக்கிறதாய் காண்கின்றாய். எப்படிச் சோதிப் பிரகாசனான சூரியன் தன் மயமான சோதிக் கதிர்களை தன்னுள்ளடக்கியும், வெளியிலுமிட்டு இருக்கின்றானோ அதே போன்று, அப்பரம சோதிப்பிரகாசன் தன்னில் தானே நிலைத்த சோதியையும், சோதிக்கதிர்களாம் தன் கிரு பாகிரணங்களை, பலஅண்ட கோளங்களாகவும். அண்டகோளத்தமரும் ஜீவர்களாகவும் பரிண மித்திருக்கின்றான். அச்சோதியின் சமீபத்திலுள்ள கதிர்கள், அச்சோதியின் உண்மையினைக்கண்டனுபவித் திருக்கிறது. தூரச் செல்லச் செல்ல தன்னிலை மறந்து, தன் பிறப்பிடமறந்து தத்தளிக்கின்றது. தத்தளிப்பதும் தன் மயக்கேயாம். மயக்க மொழிந்து தன்னிலையைஉணர வேண்டுமானால், தண்கதிர் மயமாய் நாம் வந்த வழியே செல்லவேண்டும். ஜோதியினின்று வெளிப்போந்து வந்த நாம் இன்னும் அந்தகாரத்திடை மூழ்காது ஜோதியை நோக்கிச் செல்ல முயலவேண்டும். எப்போ ஜோதி ஒன்றுண்டோ அங்கு அந்தகாரம் நிலைப்பதில்லை, ஆயினும் அந்தகாரமில்லாமல் ஜோதியின் பிரகாசம் தெரிவதில்லையே. இதுதான் பெருமயக்காயிருக்கின்றது. மனமே! ஜோதியும் அந்தகாரமு மாகிய இருபொருளே உண்மையெனக்

காண்கின்றாய். எனினும் ஜோதியுள்ளவிடத்தில் அந்தகாரம் நிலையாமையாலும் ஜோதிவடிவின் கதிரில் ஒன்றாய் நீ அமைந்திருப்பதாலும், உன் ஜென்ம தேசத்தே செல்ல விரைக. அந்தகாரத்தினிடை மூழ்கி நீ அனுபவித்த துன்பங்கள் போதாவோ? அதனால் நின்னை நீயே உணரவேண்டும். நின்னை நின் கதிர் நின் பிறப்பிடத்தே சேர்க்கும்.

ஓம் தத் சத்.

24, கண்ணீரின் பெருமை

—(o)—

மனமே! நீ சில சமயங்களில் உனக்கு வந்த துன்பங்களைக் கண்டு சகிக்க மாட்டாதவனாக் கண்ணீருகுக்கின்றாய். கண்ணீருகுத்துக் கலங்கும்போதுதான் உன் சிறமை வெளிப்பட்டு பெருமையை அடையமுயல்கின்றாய் என்பேன். கண்ணீர் உன்கண்ணிமையினின்று ததும்பிக்கொண்டிருக்கும் போதுதான், நீ அரசனாயினும் ஆண்டியாயினும் பேத அபேதமில்லாது நிற்கின்றாய். நீ நல்வழிப்பட வென்றே அக்கண்ணீர் உன் ஆத்மநிலையிலிருந்து வெளிப்படுகின்றது. உன் தற்பெருமையெல்லாம் உருகி, உன் தாழ்மையின் வழியாக அக்கண்ணீர் பெருகுகின்றது. உன் உற்ற நண்பனாகட்டும், மனைவி மக்கள் உற்றார் பெற்றாராகட்டும், நீ அநுபவித்து வந்த பொருளாகட்டும், உன்னை விட்டு ஓடிய காலத்தேயன்றோ நீ, கலங்கிக் கண்ணீருகுக்கின்றாய், நிலையாப் பொருட்களான அவைகளைச் சாஸ்வதமாகக் கருதியிருந்தாய். மகிழ்ந்தாய். தோன்றும் பொருட்களெவையும் அழியுந் தன்மையனவானகண்டப் பொருட்களேயாம். இப்பொருட்களின் உண்மை நிலை இன்னதென நீ முன்னர் அறிந்திருந்தால் அவைகளினிடத்துப் பற்று வைத்திருக்கமாட்டாய். எனினும், நீயே கண்டப் பொருளானமைபற்றி கலங்கினை போலும். நீ கண்டப் பொருளென்று கருதிக்கொண்ட உன் உடலும் பொருளுமல்லால் உன்னைத் தனியனாய்க் காண். அப்பொழுதுதான் உன்நிலை உனக்குத் தோன்றும். அதையறிவுறுத்தவே நீயே உருகுகின்றாய். உன்ஜடமும் பொருளும், அங்கனமே உருகி ஓடி ஒழிக்கின்றது. கண்ணீரானது, கண்ணினின்று தோன்றுவதின் காரணம் இன்னதென என்றேனும் ஆராய்ந்தனையா? ஆய்ந்தனையாயின், அதன் பெருமையை உணர்வாய். காட்சிப் பொருட்களெல்லாம் அக்கண்ணின் வயப்பட்டே உனக்கு நிலைத்த பேறாகக் கொண்டிருந்தனை! அப்பொருள்கள் நீ நினைத்தபடி தன்னிலை லய விட்டு தயங்கி ஒழியும்போதுதான், உனக்கும் அப்பொருள்களின் நிலை

யாமை தென்பட்டது. உன் கண்ணில் நின்ற மாயப்படலம் கிழி பட்டதால், உண்மைநிலை இன்னதெனக் காட்டவே அம்மாயை யே கரைந்து போகின்றது. மாயப் படலம்கிழி உண்மை கை வரவே நீ ஆமென்றும், உன்னிலே இன்னதென்றும், நீ பற்று வைத்ததாயுள்ள பொருள் எத்தன்மைத்தென்றும் கண்டாய். உண்மையுணர் அறிவாளராம் ஞானிகளும் ஆநந்தக் கண்ணீர் பெருக்குகின்றனரே என்று கேட்கின்றாய்; அவர் உன்போன்று நிலையாப் பொருட்களுக்கு கலங்கினரில்லையே? அவர் கண்ணீரு குப்பதின் காரணம் என்னவெனின், தன்னிலையையும், தன்னைத் தாங்கும் தலைவன் நிலையையும் நன்குணர்ந்து, தலைவனின் தண் ணருள் தங்களைச்சுவீகரித்திருக்க, சில சமயங்களில், தன்னையறி யாதே, மாயப்பொருட்களானது தன்னையும் இழுக்கக் கண்டு, மாயப்பொருட்களை வென்று, மாயையானது தீய்ந்து ஓய்ந்து போனமை பற்றி, அதன் மேற்கொண்ட கருணையால் கண் ணீருகுக்கின்றனர். பன்னாள் என்னோடு பழகி வாசஞ் செய்த தாயுள்ள மனமே! நீயும் என்போன்று கண்ணீருகுத்துக் கரை சேர வாராயா? கரைசேரத் தருணம் இன்றே, இப்பொழுதே. கடுக மனனே! கடுக.

ஓம். தத் சத்.

——(o)——

25. சாதுக்களின் வாதம்.

சில சாதுக்கள் ஒன்று கூடி தத்வ விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். எனக்குச் சாதுக்களென்றால் அத்யந்தப் பிரியம். ஏதாவது துன்பம் ஒழிந்து சுகம் பெறும் மார்க்கத்தை அவர்களிடம் கேட்டு அடைய அவாவிருந்தது. அப்படியே, அச் சாதுக்களிடம் சென்றிருந்தேன். அவர்கள் ஒருவருக்கொ ருவர் ஏதேதோ வாக்குவாதம் புரிந்து கொண்டு, தாங்கள் முடி வுக்குவந்த தீர்மானங்களை, உச்சத் தொனியில் சொல்லிக்கொ ண்டிருந்தார்கள். ஒரு சாது "கடவுள் பரலோகத்தில் ரத்ன சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார், அவர் தம் ஆணையைக் கேட்டு நடக்கும் அதிதேவதைகள் பல உண்டு, அவர்களே இவ்வுல த்தை ஆண்டு வருகிறார்கள்" என்றார். மற்றோர் சாது "கடவுள் தன் இச்சாமாத்திரத்தினாலே பலகோடி அண்டங்களையும் ஜீவர் களையும் சிருஷ்டித்தார், அச் ஜீவர்கள் நன்மையானவற்றைச் செய்வார்களானால் நற்கதியையும், தீமையானவற்றைச் செய் வார்களானால் நரகப் பிராப்தியையும் அடைவார்கள்" என்றார். இன்னொருசாது "கடவுள் தன் சாயலாகவே மனிதனைப் படை

த்தார், அவனுக்கு இது நன்மை, இது தீமை; நன்மைகளைச் செய், தீமைகளைச் செய்யாதே" என்றார். "ஆனால் மனிதனோ வாக்கின்படி நடக்காமல் தீமைகளைச் செய்தான். அதனால் அவருக்குக் கோபம் ஜனித்து அவனை நித்திய தண்டனையாகிய நரகத்துக்கு ஆளாக்கினர்" என்றார். உடனே மற்றோர் சாது அப்படிக் கோபாவேசரான கடவுள், பின் கருணையினாலேதாமே அவதார புருஷராய் உலகில் தோன்றி பாபநிவாரணஞ் செய்து, தன்னை எவர் விரும்பி பின் பற்றினார்களோ அவர்களை எல்லாம் பரலோகத்தில் எடுத்துக் கொண்டாரே, அது உமக்குத் தெரியாதோ" என்றார். பின்னொரு சாது "கடவுளைக் கண்டதார்? கேட்டதார்? எல்லாம் இயற்கை வடிவாயே நிற்கிறது. இயற்கையில் ஒன்றை ஒன்று பொருந்துகிற காலத்தில் வேறொன்றாகிறது. இது நாம் கண்கூடாய் தினமும் காணும் உண்மை இதற்காக இத்தனை வாதமேன்" என்றார் இவ்வார்த்தையைக் கேட்ட எனக்கும் இவரென்ன தடியடித் தம்பிரானோ என்று எண்ணிக் கொண்டேன். இன்னொருசாது ,,கடவுளை நாம் கண்ணாரப் பார்க்க முடியாதுதான், கடவுள் ஒன்றிருக்கிறதோ, இல்லையோவென வரையறுக்கவும் முடியாதுதான், எனினும் நாமிருப்பது உண்மை, நம்மைச் சுற்றிய பொருளிருப்பது உண்மை நாம் இவ்வுலகிலிருக்கும் வரையும் நம் மனதுக்கு எது எது நன்மை என்று தென்படுகிறதோ, அதை நாம் செய்ய வேண்டும். அதோடு நம்மைச் சுற்றியுள்ள ஜீவர்களும் அடையக் கொடுக்க வேண்டுமென்றும், இது ஒன்றுதான் நாம் செய்யக்கூடியதென்றார்''. இப்படியே பல சாதுக்களும் பல மாதிரியாக வாக்குவாதம் புரிந்து, தாம்கொண்ட கொள்கைகளை விஸ்தாரமாய், தாஷ்டாந்த திருஷ்டாந்தங்களோடு விளக்கினர். எனக்கும் எல்லாம் உண்மைபோலவே அப்பப்பொது பட்டுக்கொண்டிருந்தது. ஆனால் அச் சாதுக்களின் மத்தியில் ஒரு வயோதிக சாது, இவர்கள் பேசும்பொழுதெல்லாம் சிரித்துக்கொண்டிருந்தார். அவர் ஒருவர் சார்பிலாவது ஓம் எனத் தலையசைக்கவும் காணோம். வெறுப்புறவுங் காணோம். சாதுக்கள் சண்டை ஓய்ந்து அவரவரும் பல திசை நோக்கிச் சென்றார்கள். நான் அவ் வயோதிகச் சாதுவை அண்டி, ஸ்வாமின்! எனக்கு உபதேசிக்க வேண்டுமென்றேன். அவர் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே மகனே! இச் சாதுக்களைப் போன்று நீ விவகாரம் பண்ணாதே, எல்லாவிவகார மமகாரங்களுக்கும் கடந்தவரே கடவுள். அவரை உன்னை நீயேகேட்டுத் தெரிந்துகொள்என்றார்.

ஓம். தத். சத்.

26. ஆண்டான் அடிமை

(௧)

மனமே! நீ எதைச் செய்ய வேண்டுமென்று பிரியப்பட்டாலும், அதன் பலனாக எதையடைய வேண்டுமென்று ஆசைப்பட்டாலும், உன் குறுகிய அறிவினால் கணித்துக் கொண்டு, இதில் இவ்வளவு லாபம் பெறுவேன், இதை அப்படிச்செய்யாததினால் லாபம் பெறாது போனேன் என்று எண்ணாதே. உன் அற்ப அறிவினால் கிரியைகளின், பலா பலன்களை நிறுக்க முடியாது. ஆயின், உன்னை எல்லா வல்லமைக்கும் எல்லாச் செயல்களுக்கும் காரணனான ஒரு எஜமானின், வேலைக்காரனாகக்கருதிக்கொள். அப்போது அவ்வெஜமான், நீ எது செய்யவேவேண்டுமென்றும், எவ்வழியில் நடக்க வேண்டுமென்றும் கற்பிப்பான். அதன்படியே நடந்து அச்செய்கைகளைச் செய்து முடி. அதால்வரும் லாபமாயினும், நஷ்டமாயினும் உன்னைச் சேர்ந்ததல்ல. கட்டளைப்படி நடந்துகொண்டாயானால் எல்லாம் நன்மையாகவே முடியும். நீயாக ஒருசெயலை நன்மையாக்க முயலுகின்றாய். அது சில சமையம் நீ, எண்ணிபபடியே ஆகிறது; சில சமையம் ஆகாதொழிகிறது. இதிலிருந்து நீ, அறிந்து கொண்டதென்னை? நீ சர்வ சக்திமானில்லை என்பதே. ஆண்டானும் அடிமையுமாக உன்னை, பரம்பொருள்பால் ஒன்றுபடுத்து. ஆண்டான், நீ செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும் உனக்குத் துணை நிற்பான். எல்லாம வல்லபொருள் உன்னை இடைவிடாது சூழ்ந்திருக்கவும், அதினின்று நீ உன்னை வேறுபடுத்திக் கொண்டு உன்போக்கிலேயே போகின்றாய். அதன் பலனாயே உனக்குத் துன்பத்துக்கு காரணமுமாயிற்று. உன்னைக் கற்பிக்கும்போதே நீ எதை எதைச் செய்து முடிக்கவேண்டுமோ. எதெதில் தவறி விழுந்து அநுபவம் தெரிந்து கொள்ளவேண்டுமோ, அவைகளெல்லாம் உன்னோடேயே கலந்து, இவ்வுலகத்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றதே? வீணே என் கலங்குகின்றாய்? உனக்கு நீ செய்யுங் காரியங்களில் லாபமுமில்லை, நஷ்டமுமில்லை. ஆண்டான், உன்னை எப்படி ஆட்டுகின்றானோ அப்படியே ஆடு. அப்போதுதான் ஆனந்தம் ஜனிக்கும். எஜமானொருவன், நல்லசெய்கையையாகட்டும், தியசெய்கையையாகட்டும, ஒருவேலைக்காரனைப் பார்த்து செய்யச்சொன்னால், அவன் தன்னிலையை உணர்ந்து கட்டளைப்படியே செய்யவேண்டுமல்லவா? அடிமை, அச்செய்கைகளின் தாரதம்மியத்தையாவது, பலாபலனையாவது, எஜமானுக்கு எடுத்துச்சொல்லி எதிர்மாறு பேசலாமா? அல்லது செய்யாது மறுக்கலாமா? இரண்டிடத்தும ஆண்டானும் அடிமைத்திறமும் பிழைபட்டனவாம். ஆனதால் மனமே! நீ இன்றுமுதல் எல்லாம் வல்ல பரம்பொருளான எஜமானின், வேலைக்காரனாகப் போய் அடிமைப்படு. உனக்கென ஒன்றும் வேண்டாது எல்லாம் பரத்தி

ன் பொருட்டே என்று முழுமனத்தோடு உன்னைப்பொருந்துகிற எவ்வேலைகளையுஞ் செய்துமுடி. ஆண்டானே பலாபலனுக்குரியுவன், அடிமைக்குச் சுதந்திரம் என்ன உண்டு. ஆண்டான் சித்தம் நமது பாக்கியம் எனத் தேர்

ஓம். சத். சத்.

27. ஞானரச வாதம்

—(o)—

மனமே! நீ எல்லாச் செல்வங்களும் பொருந்தி, இவ்வுலகிலாகட்டும். மேலுலகிலாகட்டும் உனக்கு ஒப்பாரும், மிக்காருமில்லாதிருக்க விரும்புகிறாயா? அதற்காகத்தானே நீ, பலநாளும் பாடுபடுகின்றனை. அங்கு ஓடுகின்றாய், இங்கு ஓடுகின்றாய். உன் கவனமெல்லாம் பலபொருட்களில் செலுத்துகின்றாய், அவைகளை எப்படி உலைக்களத்திலிட்டு உருக்கினால், செல்வத்திற்கு ஆஸ்பதமான பொன், இரத்தினம் முதலியவைகளைப் பெறலாம் என்று, உன் கவனம் பூராவும் அதில் பதிந்திருக்கிறது. நீ இப்படி அலைந்து திரிவதுதான் எனக்குச் சிரிப்பாயிருக்கிறது. உன்னைப்போன்ற சர்வமூடன் ஒருவனிருப்பானோ? என்பதுதான் என்னைச் சதாவருத்துகிறது. அற்பலோகங்களை மாற்றுயர்ந்த பொன்னாக்க வேண்டுமென்று நீ, அவாவினது உன் ஆசையின் தீவிரத்தையேகாட்டுகின்றது. அம்மட்டிலும் நின்முயற்சிநலமே. நீ, அற்பலோகங்களாக, கல்லையும், மண்ணையும், இரும்பையும், செம்பையுமன்றோ கருதி யிருக்கின்றாய். இக்கற்களையாகட்டும், மண்ணையாகட்டும், இரும்பையாகட்டும் உன்னால் செய்யச் சாத்தியமுறுமா? நீ அவ்விதம் பலலோகங்களையும், பச்சிலைகளையும், சேர்ந்து உண்டாக்கும் பசும்பொன்னும், அந்தந்தலோகங்களின் பொலிவாய்த்தானே அமையும். உன்காலமெல்லாம் கல்லையும், மண்ணையும், செடியையும், கொடியையும் பற்றிக்கிடக்குமானால் நீ கல்லாயும், மண்ணாயும், செடியாயும் கொடியாயுமன்றோ ஆவாய். உனக்குப்பகுத்தறிவோடுகூடிய மானிடதேகம் கிடைத்திருந்தும் யாதொரு பயனும் அடைந்தாயில்லையே! மானிடதேகம் எடுத்ததின்பலன், உன்னிலும், இழிந்தபொருட்களைச்சேர்த்துவைத்துக்கொண்டு, அதிலேயே மகிழ்வதுதானோ? நன்கு ஊன்றிப்பார். ஆம்; இப்பொருளில்லாமல் இவ்வுலகில் வாழ இயலவில்லையே என்று சொல்வாயெனில், உண்மைதான்: பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை; இவ்வுலகம் என்றும் நிலையுள்ளதோ, நீயும், சாகாவரம்பெற்று உலகபோகபோக்கியங்களை அனுபவித்துக்கொண்டிருக்க நிலைத்தவாழ்வு கொண்டுவந்து நிற்

இன்றனையோ? இன்றைக்கிருந்து நாளை ஒழியும் தன்மையனான நீயோ! திடமாக எப்பொருளைப்பற்றினால் சகல இன்பமும் உன்னைப்பொருந்துமோ, அதனை ஏராது அற்பப்பொருளை அவாவுகின்றாய். இவ்வுலகிலாகட்டும், மேலுலகிலாகட்டும் நீ, இன்பம் பெற்று வாழவிரும்பினால், இன்றுமுதல் நான் சொல்லும்இரகசியவாதத்தை விடாப்பிடியாய்ப் பிடித்துச் செய்யப்பார். உன்னைத்தியானம் என்னும் உமியிலிட்டு உருக்கு. காணும் பொருள்களில்பற்றுவையாமை என்னும் விரக்திசோவினால் கிண்டு. பக்தி என்னும் பச்சிலை இரசத்தை ஊற்று. பிரவிர்த்தி என்னும் விரகினால் தணல்மூட்டு. சாந்தம் என்னும் அதிகாரியாயிருந்து உற்றுப்பார். அப்போது நீ என்பதும், நீ ஆசைப்படுவதாயுள்ள பொருட்களும் கரைந்து உருகி, பேரொளியும் பெருஞ்செயலு முடைய ஒருபொருளாவாய்.

ஓம். தத். சத்.

28. பொன்தட்டு போசனம்.

—— (௧) ——

ஒருநாள் நான் என் பிரபுகுல நண்பனொருவன் வீட்டுக்கு சென்றேன். அவன் மிருகோலாகலன். எப்போதும் விகடவார்த்தைகளையும், வேடிக்கைகளையும் விரும்புபவன் நாங்கள்பலவிஷயங்களைக்குறித்துப்பேசிக்கொண்டிருந்தோம், நேரமும் மத்தியானமாயிற்று. "நண்பா!" நீ என்னோடு இன்றுபோசனஞ்செய்யவேண்டும் வா, போகலாமென்றான். அவன் சொல்லை மறுக்கமுடியாமல் போசன அறையைநோக்கிச் சென்றோம். அங்கு வேலைக்காரர் பலர், பொன்தட்டுகளிலும், வெள்ளித்தட்டுகளிலும், பீங்கான் தட்டுகளிலுமாக, போசனங்களை கையிலேந்தி நின்றுகொண்டிருந்தார்கள். என் விகடநண்பன், என்னைப்பார்த்துச் சிரித்துக்கொண்டே "நண்ப! நீ இங்கே காணுவதாயுள்ள வேலைக்காரர் பலரிடத்தும் பலமாதிரி போசனங்கள், பலலோகத்தட்டுகளில் வைக்கப்பட்டிருக்கிறது. உனக்கு எந்தலோகத்தட்டுப் பிரியமோ அதனைப் பெற்றுக்கொள். ஒவ்வோர் தட்டிலும் உன்பசியை பூரணமாய் ஆற்றக்கூடிய போசனமுண்டு. ஆனால் நீ, பிரியப்பட்டு பெற்றுக்கொண்ட தட்டைத்தவிர மற்றபோசனத்தை ருசிக்கக்கொடுக்கமாட்டேன்; சம்மதமாயின் எந்தத்தட்டையும் கேட்டு வாங்கிக்கொள்."என்றான். நான்கொஞ்சநேரம் யோசித்து, பொன்தட்டுப்போசனம் பிரபுகுலத்தவருக்கே உரியதாகும்; அதைநாம் விரும்பினால் நமது நண்பன் நம்மை இழிந்தவனாகக் கருதுவான், அதனால் பொன்தட்டு நமக்குவேண்டாம்; வெள்ளித்தட்டோ

வெனின் நம்போன்ற ஏழைகளுக்குத் தகாதது, அதுவும்வேண்டாம். பிங்கான் தட்டே போதுமென்றெண்ணி, அப்பிங்கான் தட்டைவைத்திருந்த வேலைக்காரனைக் கூப்பிட்டு என்முன் வைக்கச் சொன்னேன். அவனும் அப்படியேவைத்தான். பசி அதிகமாயிருந்ததால், உடனே உண்ண ஆரம்பித்தேன். என் பிரபுநண்பன் பொன்தட்டுப் போசனத்தை உண்டுகொண்டிருந்தான். அவன் தான்சாப்பிடும் உணவில் மனஞ்செல்லாதவனாய், என்னைப்பார்த்து நகைத்துக்கொண்டே, "நண்ப! இத்தட்டிலுள்ளவை எவ்வளவு ருசியுள்ளது, நீ என் இதை விரும்பியிருக்க கூடாது?" என்று, அதன் மிகுதியான ருசியை அனுபவிப்பான்போல் நடித்தான். நான், அவன் நம்மேற்கொண்டுள்ள நட்பினாலிது சொல்லுகிறானென மகிழ்ந்து, மௌனமாய் என் தட்டுப் போசனத்தையே உண்டுகொண்டிருந்தேன். பிரபு நண்பன், திடீரென்று என் தட்டைப் பிடுங்கிக் கொண்டு தன்கையிலிருந்த பொன் தட்டை என்முன் வைத்து, "நான்மாத்திரம் ருசிக்கிறதோ? நீயும் பொன் தட்டு போசனத்தை ருசித்துப்பார்" என்று, கட்டாயப் படுத்தினான். நண்பன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, அப்போசனத்தை உண்ண ஆரம்பித்தேன். அது நான் முன் சாப்பிட்டுக்கொண்டிருந்த பிங்கான் தட்டு போசனமேயன்றி வேறல்லவாய்க் கண்டேன். என்னே! ஒரே ஒரு ருசியுள்ள போஜனம், பல லோகத் தட்டுகளில் வைக்கப்படுவானேன்.

ஓம். தத் சத்.

29, தாயின் கருணை

(௧)

தாய் பிள்ளைகளிடத்துக் காட்டும் கருணையின் இரகசியமே இவ்வுலகில் பெரிய ரகசியமாயிருக்கிறது. கர்ப்பமுற்ற காலமுதற்கொண்டு படாத பாடெல்லாம் பட்டு, பத்துமாதமும் சிசுவைத்தாங்கி, தான் உண்ட உணவை அதற்கு ஈடுபடுத்தி, உலகத்தில் ஜனிக்க வைக்கின்றாள். பிரசவ வேதனையின் துன்பமோ! மகாகொடிது. அதனையும் பொறுத்துக்கொண்டு, சிசு ஜனனமானவுடனே நோவெல்லாம்மறந்து முகமலர்ச்சிபெறுகிறாள். பின் தன்னுடலையே சாராசப்பிழிந்து வரும் பாலை ஊட்டி வளர்க்கின்றாள். காலாவதியில் மழலைமொழியை, வேதமொழியாகக் கருதுகின்றாள். சிறுதனத்தினாலே செய்யும் ஒவ்வொரு சேஷ்டைகளையுங் கண்டு மகிழ்கின்றாள். பெரியவர்களானபோதிலும் அவர்கள் குற்றஞ் செய்த காலத்தில், அறியாது செய்தாரென்று அதற்கு போக்கு காண்கின்றாள். பிள்ளை தாயை மறந்தபோதிலும் தாய் பிள்ளையை

மறப்பதில்லை. இதென்ன ஆச்சரியமாயிருக்கிறதே, இதை அன்பின் சோபிதமென்று பெரியோர் சொல்லுகிறார்களே! அன்பிற்கு அவ்வளவு வலியுண்டோ என்று ஐயுறலாமா? இவ்வன்னை நம் சிற்றன்னை. நமது பேரன்னை ஒருத்தியிருக்கிறாள். அவள் இவ்வுலகத்தில் காணும் பொருட்களுக்கு, ஆதிகாரணியானவள். அவள் இவ்வுலகத்தாய்மார்போன்று சடத்தோடு கூடியவளல்ல. சடபோசணைப் பொருட்களின் தாரகமாயிருக்கிறாள். அவளது சொருபமே எப்பொருளிலும் அமைந்து கிடக்கின்றது. அவள் கருணையே வடிவாகக்கொண்டவள். அவள் கிருபையை சிந்திக்கச்சிந்திக்க, அவள் உடம்பினின்றே பலகோடி ஜீவர்களான நாமும், அசர சரவஸ்துக்களும் தோன்றி நிற்கின்றனம் எனக்காண்போம். அவள் தன் உதரத்து உதித்த மக்கள்மேல் கொள்ளும் அன்பினாலேயே, தன்னிலே தோன்றிய பிறபொருட்களை ஒன்றை ஒன்று மருவி நிற்கவும், காணக்கிடக்கும் பொருட்களுள் ஒன்றுக் கொன்று உதவி உயிர் வாழவும், அமைத்திருக்கிறாள். அதனையறியாது மக்களெல்லாம், தம்பிறப்பிடத்தையும் தனக்காதாரமான பிறசகோதரப் பொருட்களையும் வேண்டுங்கால் அனுபவித்துக் கொண்டு, அதனால் ஏற்படும் அற்ப கஷ்டங்களைக்கண்டகாலத்தில் அஞ்சி ஓடுகின்றனர். உலகத்தில் அமைக்கப் பட்டிருக்கும் ஒவ்வொரு பொருளும் ஒன்றை ஒன்று பற்றிக் கிடக்கும் தன்மை வாய்ந்தனவேயாம். சகோதர ஒற்றுமையின்றி ஒன்றை ஒன்று வெறுக்க நேருமாயின், அவயவப்பழுதேயாம். நாம் நம்முள் மாறுபட்டுக் கிடக்கினும் நம்மன்னையாம் உலகமாதா, நம்மிடம் முகமலர்ச்சியோடேயே இரங்கி நிற்கின்றாள், தாயை வெறுக்கும் தனயன் எவ்வளவு நன்றி கெட்டவனோ அதே போன்று உலக மாதாவாம் அப்பெரிய அன்னையை, நாம் மாயை என்றும் மித்தை என்றும் சொல்வோமாயின், மித்தையின் பிள்ளைகளான நாமும் மித்தையே யாகுவம். மித்தைவயப்பட்டோர் கணிப்பவெல்லாம் மித்தையேயாம். அதனால் மனனே! தாயின் அன்பின் தன்மையை நினைத்து அவள்பால் என்றும் மாராப் பிரிதியுடையவனயிரு. நீ மறந்தபோதிலும் அவள் மறப்பதில்லை. உன்னை அகலவிடுவதில்லை. நின் கண்ணீர்கம்மலையை அவள் சகிக்கமாட்டாள். அவளுக்குகந்த பிள்ளையாய் நிற்கப்பழகு. அப்போதுதான் நின்னை நீஅறிந்தவன். மயங்கலை மனமே! மாதாவின் கருணையை உன்னு. மகிழ் மனமே மகிழ். ஓம் தத், சத்.

30. வாசா ஞானம்.

—(○)—

மனமே! உன் சாமார்த்தியமே சாமர்த்தியம்; உலகமெல்லாம்

கண்ணூரக் கண்டவன் போன்று சில சமயம் கூத்தாடுகின்றாய். பொருட்களின் தாரதம்மியத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போன்று தெற்றென தெளிக்கின்றாய். நீ காணவியலாத பொருட்களின் ஆழம் நீளம் அநுமானிக்கின்றாய். அதைபலரும் அறிய உரைக்கின்றாய். கேட்பவர் உன்னை ஒப்பவில்லை எனில் வெகுள்கின்றாய். ஆ உன்மடமை என்னே! மதியிலாய்! நீ கணித்துக்கொண்ட எதையுமே நீயே நம்பவுங்காண்கின்றாயில்லையே? உனக்கு ஏற்படும் சந்தேகத்துக்கும் கணக்கில்லையே? அப்படியிருக்க உன் மூடப்பிடிவாதத்தை பிறர் ஒப்பவேண்டுமாயின், உன்னைப் போன்ற மூடரே ஒப்புவர். உன்னில்மிக்க அறிவோர் ஒப்புவரோ? நீ வாசாஞானமாய் வரையறுத்த ஒவ்வொன்றையும், நீ அநுட்டிக்கின்றாயோ? அதில்லையே. பிறர் அநுட்டிக்க விரும்புவானேன். நீ கொள்கைகொண்ட எவற்றையும் முதலில் நின் அநுஷ்டானத்தில்கொண்டுவா. அப்போது உலகமும் அதனதன் கொள்கைகளை அநுட்டிக்கும். உனக்கேன் இக்கவலை. உன்னைப்போன்ற பல ஜீவவர்க்கங்களுள்ளும் உனக்குள்ள அறிவு உண்டென்பதை அறியாத மூடனாயன்றோ யிருக்கின்றாய். உன்புத்தி விஷேடத்தால் எதையும் ஆர அமர யோசித்து முடிவுகட்டினையாயின், அம்முடிவின்படி நீ நடக்கபார். நீ நடக்கவியலாது, பிறர் உன் சொற்படி நடக்கவிரும்புவது பெருந்தவறும். ஆனதால் மனனே! இன்று முதல் பிறர்க்குப்போதனை செய்வதை ஒழி. நின்னைப் பண்படுத்த நீ கண்டவைகளை நீயே அநுட்டிக்க வழிதேடு. அப்போது நீ கண்ட உண்மையின் போலிவும், அதால் நேரும் சுகங்களும், அடைந்துஆநந்திப்பாய். வீணாய் நீ கொண்ட கொள்கைகளைப் பிறரும் ஒப்பவேண்டுமென்று மூடப்பிடிவாதமாய் உன்வாய்ச் சாலகத்தைக்காட்டாதே. நீ கண்ட உண்மைகளை உண்மைக்காக நீயே அநுபவித்து நிலைத்து நில். அப்போது நீ பிறர்க்குப் போதனை செய்வதில் யாதொருபயனுமில்லை என்றும், உண்மைக்கொள்கை எதுவாயினும் எவரும் மறுக்க முடியாதபடி, எவரெவருக்கு எப்பெப்போது தெளிவுபடவேண்டுமோ, அப்பப்போதே அவர்களை அடையக் காண்பாய். நீ உண்மையில் நிலைத்திருப்பதுபோல பிறரும் அவ்வுண்மைப்பேற்றை அடைந்து வாழட்டுமே என்னுங் கருணையினால் நீ பேசநேருவதாயின், அதன் பலாபலனைக் கவனியாதே. எப்படி மழையானது, பயிற்பச்சைகளுக்கு அவசியமோ அப்படியே பாழ் நிலத்துக்கும் அவசியந்தான். ஆனால் பாழ் நிலத்தில் பெய்த மழையின் பிரயோசனம் உடனே தெரிவதில்லை; ஆனதால் பாழ் நிலத்தில் விதைக்கின்றோமே என்னும் கவலை உனக்குவேண்டாம். நீ ஞான சோபிதமாய்க்கண்ட உண்மைகளை நீ அநுட்டிக்கும் தன்மையிலிருந்து பிறரும் அநுட்டிக்க முன்

வருவார். நீ பேசுவ தொன்றும், நின் செய்கை வேறொன்று மாயிருக்க வேண்டாம். உள்ளதை உள்ளபடி உணர். அப்போதே உண்மை ஞானம் உதயமாய், பொய்ஞானம் புகலற்றுப்போம். உண்மைக்கு உறைவிடமாய் நிற்கப்பழகு. வாசாஞானம் என்றும் நிலைப்பதில்லையே, சொல்வதிலும் செய்வதேமேலன்றோ?

ஓம் தத் சத்.

(௦)

31. வெட்டவெளிப் பெண்.

(௦)

ஒரு நாள் என் அத்யந்த பிரியனான நண்பனை பார்க்கச் சென்றேன். அவன் தன் படுக்கையில் முகம் குப்புறப் படுத்துப் பிரண்டு அழுது கொண்டிருந்தான். நான் அவனை அணுகி. நண்ப! நண்பா!! ஏன் இன்னம் உறக்கம் தெளியவில்லையோ? என்றேன். அவன் என் வார்த்தையைக்கிஞ்சித்தேனும் உணராமலே, ஏதேதோ பேசஆரம்பித்தான். அவையாவன:— "பெண்ணே! நான் உனக்காகப்படும் பாட்டை சிறிதும் உணராயா? என் உடல் பொருள் ஆவியும் உன்னுடையதே. நீ எது கேட்டாலும் கொடுக்கச் சித்தமாயிருக்கின்றேனே. இப்போதே எடுத்துக்கொள். உன்னுடையகருணை மாத்திரம் வேண்டும், காதலி! உன்னைக்கலந்துறவாட வேண்டுமென்ற பேரவா என்னைச்சதாவருத்துகிறது. சட இச்சையான புணர்ச்சியின்பத்தையும் வேண்டுவனிலன். நீ, நான் காதலிப்பது போன்று என்னைக்காதலிக்கின்றாய் என்று ஒரு சொல்சொன்னாலும் போதுமானது, அதுவே நான்வேண்டுவது. அச்சொல்லை சொல்லமாட்டாயா? உனக்கு இரக்கமில்லையா. உன் நெஞ்சென்ன கல்லா? கல்லாயினும் என் இரக்கசொல் கேட்ட போது கரையுமே. இரும்பாயினும் என் காதல் தணல் உருக்குமே; கடைக்கண்பார். நின் வாயின்று வரும் புன் சிறிப்பு ஒன்றே போதுமானது. உன்னைக்கண்ட முதல் இன்றுவரை கலங்கி வாடுவதை நீ அறிவாயா? அறிந்தால் நீயும் நைவாய். நான் நைந்தாலும் பாதகமில்லை. நீ நையச்சம்மதியேன். உன்னிருகால்களேயும் பிடிக்கின்றேன். கருணைகூர்! கருணைகூர்!" என்றுசப்தமிட்டுக்கொண்டே எதிரில் நின்ற என் காலடியைக் கெட்டியாய்பிடித்துக்கொண்டான். நான் சிறித்துக்கொண்டே "நண்ப! நான் இன்னாரல்லவா. ஏன் என் காலடியைப் பிடிக்கின்றாய். நீ காதலிக்கும் பெண் நானல்ல. நான் உன் நண்பனான பிரபோதனே! காலைவிடு. உன் காதலுக்குகந்த அப்பெண்யார் எங்கிருப்பவள்?" என்று பல முறையுங் கேட்டேன். அவன் பின்னும்பின்னும் "நங்காய்! உனக் கிரக்கமில்லையா? நீ காலாலிட்ட வேலையைத்தலையால் செய்துமுடிப்பேன். கருணைகூர்! கடைக்கண்பார்!" என்று புலம்பி அழஆரம்

பித்தான் எனக்கும் நண்பன்படும் துயர்சகிக்கவியலாது கண்ணீர் ததும்பிற்று. இருவருமாக அழுதோம். என் கண்ணீர் அவன்முதுகில்படவும் அவன் திடுக்கிட்டு எழுந்து "நங்காய்! இப்பொழுது தான் கருணைவந்ததோ! நீயும் என்போல் கலங்குகின்றயாக்கும். கலங்கலை அம்ம!" என்று என்னை இருகத்தழுவ ஆரம்பித்தான். அவன் ஆலிங்கத்தினின்று விடுபடவெகு கஷ்டமாச்சுது. அவனே என்முகத்தோடு முகம்ஒட்டி முத்திடுகின்றன். நான்விலகி ஓடவும் என்னைத்தன் நண்பனை பிரபோதனெனக்கண்டு வெட்கித்தலை குனிந்தான், நானும் வெட்கினேன். எனினும்; தான் காதலிக்கும் பெண் யாரென்று நான் பலதடவை கேட்டும் மௌனஞ்சாதிக்கின்றன். தினே தினேமெலிந்து துரும்பானன். அவனை ஒருநாள் கட்டாயப்படுத்தி அப்பெண்யாரெனக்கேட்க? "நண்ப! நீ அறியாயா? அப்பெண்ணை, அதோ நிற்கிறாள்!. அவள் கருணையினலேயேதான் நான்உயிர் வைத்திருக்கிறேன், நீ பார், அதோபார்! என்று வெட்டவெளியைக்காட்டுகின்றன்; என்னே! எனக்கு அப்பெண்ணுருவம் தோற்ற வில்லையே.

ஓம். தத் சத்

32. பக்தியின் பரவசம்.

மனனே! நீ சில சமயங்களில் தெய்வ உணர்ச்சிபெற்று தோத்தரிக்கின்றய். கோயில்கண்ட இடமெல்லாம் தொழுதெழுகின்றய். நீ எவ்வளவு அறிவுடையனயினும், எல்லா சமர்த்தையுஞ் செய்ய வல்லோனயினும், வானிலாகட்டும் கடலினகட்டும் ஊடுருவிச் செல்லும் நுண்ணிய கருவிகள் அமைக்கும் கருமானயினும், உன்னைப்பார்க்கிலு மிக்க வல்லான் ஒருவனிருக்கிறன் என்ற உணர்ச்சியே, உன்னைப் பக்தியின்பால் ஈடுபடுத்துகிறது. நன்றே செய்தாய். நீ தெய்வத்தினிடம் காட்டும் பக்திவிநயம், ஏதோ ஒரு நயம் பற்றியோ? அன்றி பரம பிரீதியாகவோ செய்கின்றனை? சொல். அப்படியாயின், நின் உற்றார்உறவினர் பெண்டு பிள்ளைகளிடத்துக் காட்டும் உன் அன்பென்ன பக்தியாகுமோ? பக்தி என்பது:- உன்னில் மிக்க அறிவோரும் வல்லோருமாவாரிடத்து நீ உன்னிலையைத் தாழ்த்தி அவர் நிலையை உயர்த்திக் காண்பதொன்றன்றே? அங்கனமாயின் உன்னைச் சூழ்ந்துள்ள எப்பொருள்தான் உன்னிலும் இழிந்த பொருள். நீ இழிந்த பொருளாய்க்கருதும் சிலபொருளும், சிலகாலங்களில் பெரும் பொருளாயன்றே காண்கின்றய். அங்கனம் நீ காட்டும் பக்தி விநயம் ஒரு தலைப்பட்டதல்லவோ? ஆனதால் மனனே! நீ தெய்வ உணர்ச்சியால் காட்டும் பக்தியேபோல, மற்ற உன்னில்

சமத்துவப் பொருளிடத்தும், இழிந்த பொருளிடத்தும், பக்தியைச்செலுத்திப்பார். ஏனெனில் எல்லாப் பொருட்களும் ஏதோ ஒரு பெரும்பொருளின் பலவடிவங்களேயாம். நீ உன்னில் இழிந்த பொருளாய் ஒருபொருளையுங் கருதாதே. உன்னிலையை எப்போதும் தாழ்த்திப் பிறர் நிலையை எப்போதும் உன்னில் மிக்கதென்றே கருது. அப்போதுதான் நீ எப்பொருளுக்கும் மேலாம் ஒரு பொருளின்பால் பக்திசெலுத்தக் கூடிய பக்குவம் வாய்ந்தவன். நம்அறிவென்ன! நம்திறமைஎன்ன! நம்பிறப்புயர்வென்ன! என்று என்றேனும் எண்ணாதே. உன் அறிவையும் திறமையையும் பிறப்புயர்வையும், பிறர்கணிக்கவேண்டியதிருக்க நீ தானேயாய், அவைகளை நினைத்து அகங்கரிப்பையானால். ஐயோ! உன்னிலை மிகத்தாழ்ந்தேபோம். ஆனதால் மனமே! இன்றுமுதல் நீ காணும் எப்பொருளிடத்தும் பக்திவிநயமாய்ப்பரவசப்படு. நீ உண்மைப் பக்திமானாயின், ஒரு பொருளிடத்தும் துவேசங் காட்டாதே. துவேச புத்தி உன்னிடம் கிஞ்சித்தேனும் இருக்குமாயின் உன்னைக் கெடுத்துவிடும். பார்த்தவிடமெல்லாம், பார்த்த பொருளெல்லாம், பரமனென்றே கருது. "பார்க்குமிடமெங்கு மொருநீக்கமறநிறைகின்ற பரிபூரணானந்தமே" உன் பக்திக்குரிய பொருள், அதைத்தவிர உன்னில் இழிந்த பொருளோ சமத்துவமுடையபொருளோ வேறுகிடையாவே. ஆனதால் "கண்டனவெலாமுன்னது தெய்வமாகக்கருதி வழிபடும் நிலைகைவர", அவ்வானந்தப் பொருளோடு பரவசப்பட்டு நிலைத்துநில். அன்றே நின் பக்தியின் பலன் காண்பாய். ஓம். தத். சத்.

——(o)——

33. பாவனைப் பயன்.

மனமே! நீ எதை விரும்புகிறாயோ அதைஅடைய உனக்கு மிக்க அவாவிருக்கிறது, அதற்காக உன்னாலியன்றமுயற்சிகளெல்லாம் செய்கின்றாய். நீ விரும்பும் எப்பொருளையும் அடையவேண்டுமானால் ஒரே ஒரு ரகசியமுள்ளது, அதனை அநுட்டிக்க உன்னாலியலுமா! அநுட்டிக்க வழிதேடு. அதுவே சன்மார்க்கமாம். எந்தப் பொருளானது உலகில் தோன்றும் எப்பொருளையும் தன்னுள் அடக்கிக் கொண்டு, எல்லாப்பொருள்களிலும் உறைந்தும், உறையாமலும் சாட்சி மாத்திரமாய் நின்று நிலவுகிறதோ, அப்பெரும் பொருளோடு ஒன்றப்பார். அது இயலுமோ என அஞ்சற்க. நீ தானே அப்பொருளை உன் புத்தி விசேஷத்தால் பாகுபடுத்திக் காணவேண்டாம். நீயும் அப்பெரும் பொருளில் அடங்கியவனே! நீ விரும்பும் எப்பொருளும் அப்பெரும் பொருளில் அடங்கியவைகளே! ஆனதால் நீ எப்பொருளைவிரும்பினாலும், அப்பொருள்

முன்னரே உன்னில் சம்பந்தப்பட்டு உன்னோடேயே அமைந்திருக்கின்றது. இவ்விதப் பாவனை முதலில் செய்ய உனக்கு கஷ்டமாயே யிருக்கும். கஷ்டங்கள் நேர்ந்த காலத்தில் உன்னில் மிக்க பரம் பொருளொன்று உன்னைச் சூழ்ந்து உன்னையும், நீ விரும்பும் பொருளையும் விழுங்கிநிற்கிறதாகக் காண். அப்போது நீ என்பது பூரணமாய்க் கரைந்து, அப்பெரும்பொருள் ஒன்றே உள்ளதெனக்காண்பாய். வேண்டுவார்க்கு வேண்டியாங்கு கொடுக்கும் வள்ளல் தன்மை பரம்பொருள் ஒன்றன்பால் தானுள்ளது. அது ஒன்றுதான் உலகிலுமுள்ளது. எங்கணுமுள்ளது. எவ்விடத்துமுள்ளது. நீ என்னும் தனிப்பொருளும், அதுவென்னும் வேறு பொருளும் உண்மையிலில்லை. ஆனதால் மனனே! நீ நின்னை மறந்து, எதைப் பாவனைபண்ணுகின்றனையோ அதன்படியே யாவாய். நீயே நினக்குச் சத்துருவும் மித்துருவுமாய் நிற்கின்றாய். நீ தன்னந்தனியனாய் நிற்கும் இயல்பில்லாதவன். நீ தனியனாய் காண்பது உன் அறியாமையே. இவ்வறியாமையை நீ கொண்டு குலாவும் வரையும், நீ எதைப் பாவனைபண்ணினாலும், அதில் வரும் பலனும் அதால் நேரவிருக்கும் பதவியும் தாழ்ந்தவையே யாம். நீயே உலகமெல்லாம் நிறைந்து நிற்கின்றாய். நின்னோடு ஒப்புவமை கூறும் பொருள் வேறுகிடையாது, நீ சங்கற்பிக்கும் எதையும் பரம்பொருளின் சங்கற்பமென்றே கருது. பரம் பொருளும் நீயும் வேறல்லர். ஆயின் நின்னைத் தனியனாய் காணாதே நீ என்ற அகம்பாவம் உன்னிடம் நிலைக்கவேண்டாம். நின் அகம் பாவனை செய்யும்போது நின்னை மறந்துவிடு. நின்னை விழுங்கிய பொருள் வடிவாயே நில். ஆனால் இதனை மாயாவாதமெனச் சொல்கின்றனரே என்று அஞ்சற்க. நீ இதனை மாய வதமெனக்கண்டுதேர். நான் என்பதும், அதுவென்பதும் நடுவேமுளைத்த மாயை என்பதுமான முப்பொருள் பேதமுள்ள வரையில் பாவனையால் யாதொரு பயனுமில்லையே! நானும் மாயையும் தீய்ந்து ஒழிந்து,நானும் மாயையும் அதும் கரைந்துருகி, அதேபொருளாய்க் காண்கின்றேனெனப் பாவனைசெய். அப்பொழுதே, "சிவோகம், சிவோகம். தத்வம்சி" என்னும் வாக்கியார்த்தம்கண்டு தெளிவாய். நின் பாவனைப் பயனும் சித்தியாம். மனனே! இன்று முதல் நீ எதைப் பாவனை பண்ணினாலும் எதை விரும்பினாலும், நின்னை நீயே உள்நோக்கி, நீ என்பதை மறந்து நின் வடிவமென்பதை மறந்து, நின் நினைப்பு என்பதை மறந்து நிற்கப்பார். அப்போதே நீ ஒழிந்தாய். அது ஒன்றே உள்ளதெனக்கண்டு அதன் மயமாகவிருப்பாய். இதுவே பாவனையின்பெரும் பயன். பாவனை செய்யப் பின்னிடையாதே.

ஓம் .தத் சத்.

மூன்று தனிப் பாசுரங்கள்

கடவுள்.

தோற்றப் பொருளைத் துணைபெறும் மக்கள்
மாற்றமுறு பொருள ளவையை நோக்காது,
கால் நீர் அனல்பூ வெளியெனக் கணித்தனர்.—நீதான்
மேலாய் நின்று மேவுறல் கண்டிலர்.
கண்ட பொருளிற் கணிப்பவ ரன்றிக்
காணாப் பொருளைக் காணுதற் கறியார்.
எப்பொருள் தன்னிலும் இயங்குறும் நின்னைத்
தப்பறக் கொள்பவர் தாம், அறிவுடையோர்.—நீயோ!
நானெனும் அகந்தை நாட்டினை யல்லை;
அதுவெனும் பெயருள் அணுகினை யல்லை;
வானெனும் தலத்தில் வசிப்பவ னல்லை;
வாங்குதல் கொடுத்தல் வழக்கினை யல்லை,
நீயே யாவுமாய் நின்றவன் அன்றோ!
நின்னோ டொப்புமை நீணிலத் துண்டோ?
தாயே யாவாய், தந்தையு மாவாய்,
தாரமும், பொருளும், யாவுமே யாவாய்,
நாயேன் துதியுனை நவிலுமா றெங்கன்?
நானோ அறிவிலி! நீயோ அறிவுளை!!
வாயே வாழ்த்துக! மனமே மகிழ்க!!
வள்ளல் நின் திருவுளம் வைத்தவா றொழுகவே!

உலகம்.

உறு பொருளெவையும் உள்ளகத் தடக்கி
கருவுரு வாக்கும் கண்ணகன் உலகே!
நின்வயின் உதித்து, நின்வயின் ஒடுங்கும்
பன்முறை பிறப்பும், பன்முறை யிறப்பும்,
தோன்றின கெடுதலும், தோன்று வுறுதலும்
காண்பவர் மயக்கோ? காரண முளதோ?
நீயேபலவாய் நிறைந்து நின்றனையோ?
நின்னிடத் தொருவன் நிறம்பியுள் உளனோ?
நீயிலா தவனும் அவனிலா நீயும்
தனித்தொரு முதலாய் தங்கல் கண்டிலனே!—அதனால்

எண்ணரும் உலகத் தியற்கை யாவும்,
முன்னாட் டொடங்கி இன்னாள் வரையும்,
நண்ணரும் வெளியில் நலிதலும், தோன்றலும்
முறையே நடப்பன முடிவொன் றின்றி.
எப்பொருளாய் நீ இசைந்துருக் கொளினும்,
அப்பொருள் தனினும் அவனன்றி யசையும்
முதன்மை, நினக்கே முற்றுமா றல்லை.
காரண காரியம் இரண்டையுங் கடந்த,
ஆரணம் அலறும் அருள்பொழி யண்ணல்,
வைத்தவா றென்றும் வாழிய நீயே.

(ப)

மனிதன்.

(o)

மண்ணிடைப் பொருளின் மாண்புடை யுருவே!
எண்ணியாங் கியற்றும் இயல்புமிக் குள்ளோய்!
காதற் கடலிடைக் கலங்குமென் கல[illegible]தோய்!
சாதற் பிறத்தற் சழக்கிடைச் சுழல்வோய்!
நின்னாள் உலகில் நிலைபெறும் வரையும்,
இன்புறுங் காலைத் துன்பினை நினையாய்,
துன்புறுங் காலை இன்பிற் கழுங்குவை,
உண்ணலும், உறங்கலும், உவத்தலும் அன்றி
எண்ணரும வினையினை யெண்ணியுள் உருகுவை.—அதா[illegible]
வலியவர்க் கடங்குவை, எளியரை வருத்துவை,
நலிவுறுங்காலை நபம்பட நடிப்பை.
என்னே நின்மதி! என்னே நின்கதி!!
மன்னே யெனினும் மகிழ்நிலை யின்றால்.—மனுவே!
கலங்கலை என்றும் கண்ணீ ருகுத்து.
நலங்கொளு மின்பம் நண்ணுதல் வேண்டில்,
மலைவுறு தெதையும் மயக்கறத் தெளிந்து,
அங்ஙனே அங்ஙனே அமையுமா றற்று,
செய்க செயலினை; செயற்பலன் கருதாது
உய்க; தினம் உகந்து உள்ளவாறுக!
நிலையுறும் பேறு நிச்சயம் நினக்கே.

பிரம்முத்தன்.

முற்றிற்று.

யோக சாதனம்.

தியானச்சிந்தனைகளை எழுதிய, பிரம முத்தனால் "யோக சாதனம்" என்ற ஓர் நூல் கூடிய சீக்கிரம் வெளிவரும். தியானச் சிந்தனைகளின் குப்தமான முடிவுகளைத், தம் சுய அநுபவத்தால் கண்டு தெளிய விரும்பும் ஒவ்வொருவரும் வாசித்து உணரக் கூடிய ரகசியங்கள் அடங்கியது. ஆண், பெண், இருதிறத்தி னரும், எப்பருவத்தும் இலகுவில் அப்பியசிக்கத்தகுந்த முறை களை உட்கொண்டது. ஆன்ம சக்தியை விருத்திசெய்து, பரம் பொருளோடு ஒன்றி, உலகில் சாந்தமுற வாழ விரும்பும் முமுட் சுக்களுக்கு இன்றியமையாத சாதனமாகும். வேண்டுவோர், எ க்கு எழுதிக்கொள்ள வேண்டுகிறேன்.

குற்றாலரோட்டு } தொ. மு. பாஸ்கரன்,
திருநெல்வேலி. } S/o தொண்டைமான் முத்தையன்.

இப்புத்தகம் கிடைக்கு மிடங்கள்

1 தொ. மு. பாஸ்கரன்,
குற்றாலரோட்டு, திருநெல்வேலி

2. மானேஜர், யூனியன் சென்ற்ரல் பிர
வடக்குரதவீதி, திருநெல்வே

3. S. R சுப்பிரமணியபிள்ளையவர்கள்
புக்செல்லர், திருநெல்வேலிப் பால

4. S. நரசிம்மபிள்ளையவர்கள்,
டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்